0.50

श्रीमद्भागवतान्तर्गता

॥ ब्रह्मस्तुतिः ॥

பிரம்மஸ்துதி.

SANKARA PUBLISHING HOUSE.
SIVANKOVIL STREET,
NURANI, PALGHAT

श्रीमद्भागवतान्तर्गता

॥ ब्रह्मस्तुतिः ॥

பிரம்மஸ்துதி.

Text in Sanskrit & Tamil with Translation & Notes in Tamil

by

Pandit N. S. Ananthakrishna Sastry,

Vedantha Siromani,

Retired Sanskrit Pandit, Udamalpet.

All Rights Reserved.

SANKARA PUBLISHING HOUSE.

SIVANKOVIL STREET,

NURANI, PALGHAT

1956 Price 6 As.

Printed at
THE SCHOLAR PRESS
PALGHAT

॥ श्रीरस्तु ॥

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

श्रीकृष्णाय परस्मै ब्रह्मणे नमः ॥

முகவுரை.

समाश्रिता ये पदपल्लवप्लवं महत्पदं पुण्ययशो मुरारेः ।
भवाम्बुधिर्वत्सपदं परं पदं पदं पदं यद्विपदां न तेषाम् ॥

ஸமாச்ரிதா யே பதபல்லவப்லவம்
மஹத்பதம் புண்யயசோ முராரே: ।
பவாம்புதிர்வத்ஸபதம் பரம் பதம்
பதம் பதம் யத்விபதாம் ந தேஷாம் ॥

அரிய மானிடப்பிறவியை வீண்படுத்தாது பயன்படுத்திக்கொள்ளுதல் ஒவ்வொரு மனிதனுடையவும் முக்கியமான கடமையென்பதை உணர்ந்து அதற்குத்தக்க உபாயத்தைத் தேடுதல் அவசியமான காரியம். நமது முயற்சியால் சேமித்த செல்வம் முதலியவை வாழ்க்கையில் சிலகாலம் இன்பத்தையளித்தபோதிலும், அவைகளை நாம் இழப்பதும், அவைகளால் நாம் இழக்கப்படுவதுமாகிய நிலைமை தவிர்க்கமுடியாமலே இருக்கிறது. நாம் அனுபவிக்கும் சுக துக்கங்களும் பலவுள. அற்ப சுகங்கள் அற்பகாலத்தில் நிலவி பின்பு துன்பத்தையே அளிக்கின்றன என்பது எல்லோரும் வாழ்க்கையில் அனுபவிக்கிற விஷயமாகையால் அதைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. சிற்றின்பம்

பேரின்பத்திற்கு உதாரணம். பேரானந்தத்தைப் பெற்ற மகான்கள், மற்றவர்களும் தங்களைப்போலவே தமது ஜன்ம ஸாபல்யத்தை அடைவதற்கு உபாயத்தை உபதேசித்துளர். அந்த உபாயம், முராரியின்=முரன் என்ற அசுரனைக் கொன்ற ஸ்ரீகிருஷ்ணருடைய திருவடிமலரை அடைதல். அவருடைய திருவடி அழகினாலும், மிருதுத்தன்மையாலும், பரிமளவாசனையாலும் மிக்க பெருமிதம்பெற்றது என்று எல்லோரும் எவ்வளவு தடவை சொன்னாலும் எல்லை காண முடியாதது. பரிசுத்தமான கீர்த்திகொண்டது. அடைந்தவர்களைமட்டுமின்றி, அதனைப்பற்றிக் கூறுகிறவர்களையும், நினைக்கிறவர்களையும், அந்தப் பாதத்தை நினைத்தவர்களுடன் ஸகவாசம் செய்தவர்களையும் பரிசுத்தம் செய்கிறது என்றால், அதன் பரிசுத்தத்தன்மையை யார் புகலமுடியும்? ஆகையால் 'மகத்துக்களுக்கும் பதமானது' என்று கூறப்பட்டது. பிறப்பிலேயே துன்பங்களின் சம்பந்தம் பெறாத பிறவித் துறவிகளாகிய ஸநகாதியோகிஜனங்கள் அதனையே தமது இடம் என்று கருதி இடைவிடாது சேவிக்கின்றனர். முக்திபெற்றவர்களும் அடையவேண்டிய பதவி அதுதான். அந்தத் திருவடியை அடைதல்தான் முக்திசுகம் என்பது சுருக்கச் சொல். ஆகையால் அவர்களுக்கு ஸம்ஸாரஸமுத்திரத்தைத் தாண்டுதல் கன்றின் குளம்பினடியிலுள்ள பள்ளத்தில் தங்கிய ஜலத்தைத் தாண்டுதலுக்கு நிகரானது. ஆகையால் அதனை ஓடம் என்று உருவகப்படுத்திக் கூறுகின்றனர். சிறந்ததும் அழிவற்றதுமாகிய வைகுண்டம் அவருடையதேயாகும். எவ்விதமான விபத்தும் அவர்களை அணுகாது என்று மேற்கூறிய செய்யுளின் கருத்து.

அந்த பகவானுடைய பாதங்களில் பக்திசெய்யவேண்டுமேயாகில், அவருடைய அவதாரலீலைகளை நன்கு அறிய

வேண்டும். அத்தகைய அரிய லீலைகளில் 'அகாசுரமோக்ஷம்' என்பது முக்கியமானது. அதனைப் பின்பற்றி 'பிரம்மஸ்துதி'=பிரம்மதேவர் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை துதித்தல்—என்ற பகுதி பக்திப்பெருக்கைப் பொழிகின்ற எல்லையில்லாச் சிறப்பு பொருந்தியது.

एतत्सुहृद्भिश्चरितं मुरारेरघार्दनं शाद्वलजेमनं च ।
व्यक्तेतरं रूपमजोर्वभिष्टवं शृण्वन् गृणन्नेति नरोऽखिलार्थान् ॥

ஏதத்ஸுஹ்ருத்பிச்சரிதம் முராரே-
ரகார்தனம் சாத்வலஜேமனம் ச ।
வ்யக்தேதரம் ரூபமஜோர்வபிஷ்டவம்
ச்ருண்வன் க்ருணன்னேதி நரோऽகிலார்த்தான் ॥

தன்னுடைய நண்பர்களுடன் ஸ்ரீகிருஷ்ணர் ஆற்றிய செயலையும், ஸ்ரீகிருஷ்ணருடன் அவரது நண்பர்கள் செய்த விளையாட்டுக்களையும், (ஒருவன் மற்றவனுடைய பாத்திரம், உறி, மற்றப்பொருள் என்பவைகளை விளையாட்டிற்காக எடுத்து ஒளித்தல் முதலிய லீலைகளையும்), அகாஸுரனைக் கொன்றதையும், புல்மைதானத்தில் ஆனந்தத்துடன் ஆகாரம் உட்கொண்டதையும், ஸச்சிதானந்தவடிவங்களான பல மூர்த்திகளின் தோற்றத்தையும், பிரம்மதேவர் செய்த சிறந்த துதியையும் கேட்கிறவன், சொல்கிறவன் (மனதில் நினைக்கிறவன்) ஆகிய மனிதன் ஒவ்வொருவனும் தன்னுடைய விருப்பங்களனைவற்றையும் பெறுகிறான் என்று பலனைக் கூறுகிற வசனம்.

அதனை தினந்தோறும் படித்தவர்கள் இணையற்ற ஆனந்தத்தை அடைகின்றனர் என்று கூறுதல் ஸத்தியமான வசனம் என்றுதான் அற்பனான அடியேனால் கூறமுடியும்.

இந்த சுலோகங்களைக் கூறி சிறிது காலம் முறைப்படி நமஸ்காரம் செய்துவந்ததினால், 'இந்த ஸ்துதியின் கருத்தைத் தமிழ்மொழியில் விளக்கி பிரசுரம் செய்யவேண்டியது உனது கடமை' என்று ஸர்வசக்தராகிய அந்தப் பரமருடைய அருளைப் பயன்படுத்த விரும்பி பிரும்மீபூதராகிய தந்தையின் பாதகமலங்களுடைய அருளைத் துணையாகத் துணிவுடன் பெற்றுக்கொண்டு இந்தக்காரியத்தில் ஈடுபட்டுள்ளேன். அடியேனுடைய அற்பமுயற்சி முகுந்தருடைய பேரருளைப்பெறும் என்பதில் ஐயமில்லை. நேயர்கள் இதனைப் பயன்படுத்த மிகவும் அன்புடன் கோருகிறேன்.

சான்றோர்களுக்கு அடியேன்

N. S. Ananthakrishna Sastry,

Retired Sanskrit Pandit,

Board High School, Udumalpet.

॥ श्रीरस्तु ॥

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

श्रीकृष्णाय परस्मै ब्रह्मणे नमः ॥

॥ ब्रह्मस्तुतिः ॥

பிரம்மஸ்துதி.

அகண்டஸச்சிதானந்தரூபியும் பாற்கடலில் பள்ளி கொண்டவருமாகிய ஸ்ரீமந்நாராயணன் பிரம்மா முதலான தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி தேவகீவஸுதேவர்களுடைய பாக்கியத்தினால் அவர்களுக்குப் புதல்வராகத் தோன்றியபோதிலும் அளவற்ற பாக்கியம்பெற்ற யசோதாநந்தகோபர்களுக்கு வளர்ப்புப் புதல்வனாக ஆயர்குலத்தில் வளர்ந்துவருகையில் தனது லீலாவிசேஷங்களைக் காண்பித்து இடையாகுலத்தினை மிகவும் ஆனந்திக்கச்செய்தார்.

அந்த ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் 'அகன்' என்ற அசுரனைக் கொன்று அவனுக்கு முக்தியை அளித்தார் அந்த முகுந்தன். சுமார் ஆறுவது வயதில் காண்பித்த அந்த லீலை ஸத்தியலோகத்தில் வசிக்கும் நான்முகனை வியப்புக்கடலில் ஆழ்த்தியது. அத்தகையருடைய மற்ற லீலாவிசேஷங்களைக் கண்ணுற மிக்க குதூகலங்கொண்ட பிரம்மதேவர் அன்றையதினத்தில் அந்த ஸ்ரீகிருஷ்ணருடையவும் ஏனைய இடையர்களுடையவும் கன்றுகள் காட்டில் மேய்ந்துகொண்டிருக்கையில் அவைகளைத் தனது மாயையினால் அபகரித்தார். ஸ்ரீகிருஷ்ணர் மத்தியில் உட்கார்ந்துகொண்டும் மற்ற இடையச்சிறுவர்கள் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டும் தமது

ஆகாரத்தை உட்கொண்டிருந்தனர். கன்றுகளைக் காணுமையால் கவலையடைந்த கோபர்கள் அவைகளைத் தேடுவதற்கு சாப்பாட்டின் மத்தியில் எழுந்தனர். எல்லாமறிந்த ஸ்ரீகிருஷ்ணர், "சாப்பாட்டுமத்தியில் எழாதீர்கள். கன்றுகளை யான் இங்கு தருவிக்கிறேன். இந்த விஷயத்தில் உங்கள் முயற்சி வேண்டாம் முயன்றும் பயனில்லை" என்றிவ்வாறு கூறி அந்தக் கன்றுகளைத் தேடுவதற்கு அங்கிருந்து தானே கிளம்பினர். மற்றவர்களுக்கு "சாப்பாட்டின் நடுவில் எழக்கூடாது" என்று சட்டம் கூறிய அவரை அந்தச் சட்டம் பாதிக்காது என்பதைச் செயலினால் விளக்கினர் போலும்!

அந்தக் காட்டில் புதர்களிலும், நதியின் கரைகளிலும், குகைகளிலும் நன்கு தேடியும் கன்றுகளைக் காணுமல் திரும்பிச்சென்றார். அதற்குள் தங்கியவிடத்தில் நண்பர்களையும் காணவில்லை. வருந்தியவர்போல் எல்லாவிடங்களிலும் தேடினர், வியந்தார். இது யாவும் விதியின் செயல். பிரம்மதேவனின் செயல், அதிருஷ்டத்தின் பயன், என்று மனதில் தீர்மானங்கொண்டார். ஆயர்குலத்தினர்களுக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது? தனது நாபியிலிருந்து தோன்றிய புதல்வனை நான்முகக்கடவுளுக்குத் தனது மகிமாதிசயத்தை உணர்த்துதல் மிக்க அவசியம். இவ்வாறு மனதில் தீர்மானித்து தன்னுடைய மாயாவிபூதியினால் அநேக இடையச்சிறுவர்களாகவும், கன்றுகளாகவும், அந்தக் கன்றுகளை ஓட்டுவதற்கு உபயோகப்படுத்தும் சவுக்குகளாகவும் தோன்றுவதுமன்றி இடையர்களுடையவும், கன்றுகளுடையவும், சவுக்குகளுடையவும் உயரம், நிறை, நிறம், குணம், ஆடை, உடை, பாவனை முதலிய எல்லாக் குணங்களிலும் சிறிதேனும் மாற்றமின்றித் தோற்றமளித்தார். எல்லா வல்லமையுமுள்ள பகவானுக்கு இது ஒரு அரிய காரியமோ?

"ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் = உலகம் யாவும் விஷ்ணுஸ்வரூபமேயாகும்" என்று நூல்கள் கோஷிக்கின்றன. இந்த விஷயத்தில் அவநம்பிக்கை வேண்டாம் என்பதை பயன்படுத்திக் காண்பித்தார்போலும்! இவ்வாறு ஒரு வருஷம் முடியும் வரை அந்த அச்சுதர் கணக்கில்லாமல் தன்னுடைய லீலையைக் காண்பித்தார். வழக்கம்போல் அந்தக் கோபர்கள் காலையில் கன்றுகளை மேய்காலுக்கு ஓட்டிச்சென்று மாலையில் திரும்பி வருவதிலாவது, கன்றுகள் தமது தாய்மார்களின் அருகில் செல்வதிலாவது, சிறுவர்கள் தாய்தந்தையர்களிடம் பணிவுபசாரங்களுடன் நடந்துகொள்வதிலாவது, பேச்சிலாவது, சுருக்கிக்கூறுகையில் சவுக்குகளின் அளவு, நிறம் ஆகிய எந்த விஷயத்திலும் ஒருவித மாறுபாடும் நிகழவில்லை; என்றால் அந்த பகவானுடைய "ஸர்வக்ஞத்தன்மை, ஸர்வசக்தி" என்பவைகளுக்கு இதைக்காட்டிலும் வேறு நிரூபணம் வேண்டுமோ? அந்த ஒரு வருஷத்தில் நிலவிய விசேஷம் யாதெனில் இடையர்களுக்கும் பசுக்களுக்கும், புதல்வர்களிடமும் கன்றுகளிடமும் நிலவிய அன்பை அளவிடமுடியவில்லை. எத்தகையது என்று கூறவும் முடியவில்லை. பெற்றோர்களுக்குப் புதல்வர்களிடம் நிகழும் அன்பைக்காட்டிலும் மிகவும் உயர்ந்த அன்பாகவிருந்தது. அந்த அன்பின் அளவு அனந்தனாகிய பரமனாலும் அறியமுடியாததாகவிருந்தது. அந்த முகுந்தன் கோபிமார்களிடம் தனது புதல்வத்தன்மையை மாயையின்றியே மிக்கக் கருணையுடன் நடத்திக் காண்பித்தார்.

பிரம்மதேவரோவெனில், தான் வெற்றிபெற்றதாக உவகையுடன் தனது உலகத்திற்குத் திரும்பிவிட்டார். அதாவது—கன்றுகளையும், கோபர்களையும் ஸ்ரீகிருஷ்ணருக்குத் தெரியாதபடி தான் அபஹரித்து மாயையினால் ஒரு குகையில் துயிலும்படிச் செய்துவிட்டு, இதனை ஸ்ரீகிருஷ்ணர்

அறியவும் மீட்குதலும் முடியாது என்று கருதினார். ஸத்யலோகமடைந்ததும் அங்கு தனது ஆஸனத்தில் நான்முகங்களுடன் விளங்கும் பிரம்மதேவர் இருந்தமையால் துவாரபாலகர்களால் விரட்டப்பட்டார். தனது பதவி நழுவிவிட்டது என்ற அச்சம் மேலிட்டது. திரும்பி பிருந்தாவனத்திற்கு வந்தார். ஸ்ரீகிருஷ்ணர் தனது நண்பர்களுடன் முன்போலவே (ஒரு வருஷத்திற்கு முன்போலவே) கன்றுகளை மேய்த்துக் களிப்பதைக் கண்ணுற்றார். ஐயங்கொண்டார். மாயையினால் துயிலும்படிச் செய்த இடையச்சிறுவர்களையும் கன்றுகளையும் ஸர்வக்ஞனும் ஸர்வசக்தனுமாகிய ஸ்ரீகிருஷ்ணர், தான் பிரம்மலோகம சென்று திரும்புவதற்குள் அங்கிருந்து கொண்டுசென்றுவிட்டாரோ என்ற ஐயம். குகையில் சென்று பார்க்கையில் அவர்கள் முன்போலவே துயிலுகிறார்கள். எவை உண்மையானவை, எவை மிகையானவை (போலி) என்று தீர்மானம் செய்யமுடியவில்லை. அச்சம், ஐயம், மிகமை என்பவைகளால் மனம் கலங்கியது.

அன்றையதினம் அடிவாரத்தில் மேய்கின்ற கன்றுகளைக் கண்ணுற்ற பசுக்கள் யாவும் ஒரே பாய்ச்சலாக மேலிருந்து கீழே இறங்கின. இரண்டாவது கன்றிருக்கையில் முதலீன்ற கன்றுகள் பசுக்களை ஊட்டுகின்றன. இடையர்களுடைய கட்டுக்கு அவை அடங்கவில்லை. இடையர்களும் வியந்து கீழே இறங்கிவந்து சிறுவர்களைக் கட்டியணைத்தும் முத்தமிட்டும் ஆனந்தத்துடன் நர்த்தனம் செய்தனர். இவைகள் யாவற்றையும் கண்ணுற்ற பலராமருக்கு ஒன்றும் புரியவில்லை.

அத்தருணத்தில், மிகவும் வியப்படைந்த பிரம்மதேவர் அடுத்த கணத்தில் எல்லோரையும் நான்கு கைகளுடன் கூடியவர்களாகவும், கரிய மேகம்போன்ற நிறமுள்ளவர்களாக

வும், சங்கு, சக்கரம், கதை, பத்மம் இவைகளைத் தரித்தவர் களாகவும், பீதாம்பரதாரிகளாகவும், பக்தர்களால் சேவிக் கப்பட்டவர்களாகவும் கண்ணுற்றார். பின்னர், அவைகள் யாவும் மறைந்து ஸ்ரீகிருஷ்ணர் ஒருவர்மட்டும் தோற்றம ளிக்க அவரைக் கண்டபிறகு விழுந்து விழுந்து வணங்கி ஞர்; துதித்தார்—

नौमीड्य तेऽभ्रवपुषे तडिदम्बराय
गुञ्जावतंसपरिपिच्छलसन्मुखाय ।
वन्यस्रजे कवलवेत्रविषाणवेणु-
लक्ष्मश्रिये मृदुपदे पशुपाङ्गजाय ॥ १

நௌமீட்ய தேऽப்ரவபுஷே தடிதம்பராய
குஞ்ஜாவதம்ஸபரிபிச்சலஸன்முகாய ।
வன்யஸ்ரஜே கபளவேத்ரவிஷாணவேணு-
லக்ஷ்மச்ரியே மிருதுபதே பசுபாங்கஜாய ॥ 1

ஈட்ய= துதிக்கத்தக்கவரே! கார்மேகம்போன்ற உடலு டையவரும், மின்னல்போன்ற பீதாம்பரத்தைத் தரித்தவ ரும், பூங்கொத்தைக் காதில் அணியாக அணிந்தவரும், மயில் தோகையை தலையில் தரித்ததினால் அழகாக விளங்கும் மு கத்தையுடையவரும், காட்டிலுள்ள மலர்களை மாலையாக அ ணிந்தவரும், இடது கையில் சுவையுள்ள ததியோதனத்தின் உருண்டை; இடது கக்ஷத்தில் பிரம்பும், கொம்பும்; இடுப் பில் வேஷ்டியில் புல்லாங்குழலும் வைத்தவரும், மிக அழகிய வரும், சிறுவடிவமுடையமையால் மிருதுவான பாதங்களு டன் கூடியவரும், நந்தகோபருடைய புதல்வருமாகிய தங்க ளை 'தங்களையே அடைதல்' என்ற முக்திசுகத்திற்காகத் துதிக்கிறேன்.

[தங்களைத் துதிக்கின்றேன் என்று இரண்டாம் வேற்றுமை கூறவேண்டியதாயினும் நான்காம் வேற்றுமை சுலோகத்தில் கூறியுள்ளது, 'தங்களையே பயனாகக்கொண்டதான துதி' என்ற கருத்தை விளக்குகின்றது. தனது தந்தையானது பற்றியும் ஒப்புயர்வற்ற சிறப்பு பொருந்தியமையாலும், அவருடைய பெயரைக் கூறுவதற்கு அஞ்சி கோபருடைய புதல்வன் என்று பிரம்மதேவர் கூறுகிறார். அதனால், அந்த நந்தகோபருடைய பக்தியின் வன்மையும், பாக்கியத்தின் சிறப்பும், பக்தர்களுக்கு பகவான் வசமாகிறவர் என்றும் விளக்கப்படுகிறது. காலின் அழகும் கருணையும் 'மிருதுபதே' என்ற சொல்லினால் விளக்கப்படுகிறது.]

[துதிக்கிறேன் என்று உறுதிகூறி, அவ்வாறு துதிக்காமல் என்னுடைய (ஸ்ரீகிருஷ்ணனுடைய) உருவத்தை மட்டும் கூறுகிறீரேயன்றி குணவிசேஷங்களைக் கூறுகிறீரில்லை. குணாதிசயங்களைக் கூறுதல்தான் துதியாகும் என்ற ஒரு ஆட்சேபம். அல்லது, இது என்னுடைய உரிமையான உருவமன்று. அப்படியிருக்கையில் இதனை ஏன் பிரஸ்தாபிக்கிறீர் என்று வேறு ஒருவித ஆட்சேபம். இவ்விரண்டிற்கு விடை கூறுகிறார் :—

अस्यापि देव वपुषो मदनुग्रहस्य
स्वेच्छामयस्य न तु भूतमयस्य कोऽपि ।
नेशे महि त्ववसितुं मनसाऽऽन्तरेण
साक्षात्तवैव किमुतात्मसुखानुभूतेः ॥ २

அஸ்யாபி தேவ வபுஷோ மதனுக்ரஹஸ்ய
ஸ்வேச்சாமயஸ்ய ந து பூதமயஸ்ய கோऽபி ।
நேசே மஹி த்வவஸிதும் மனஸாந்தரேண
ஸாக்ஷாத்தவைவ கிமுதாத்மஸுகானுபூதே: ॥ 2

ஹே தேவ = மாயையினால் விளையாடுகின்றவரே! என்னை அனுக்கிரகம் செய்வதற்காகத் தமது விருப்பத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாயினும் ஐந்து பூதங்களால் அமைக்கப்படாதது தங்களுடைய இந்த உடல். இதன் மகிமையையே ஒருவனும் கூறமுடியாது. பிரம்மதேவன் என்று பெயரைப்பெற்ற நானும் உரைக்க வல்லமையுள்ளவனல்லன். ஞானத்தை அடைவதற்குக் காரணம் மனதை அடக்குதல். பொறிகளையும் மனதையும் அடக்கினவனாயினும், என் மீது கருணையினால் எனக்குமுன் தோன்றிய இந்த ஸ்தூலவடிவத்தின் மகிமையை நான் (தமது நாபியிலிருந்து தோன்றிய பிரம்மனாயினும்) உணரவல்லவனல்லன். அப்படியிருக்கையில், ஆனந்தரூபியான உமது ஸச்சிதானந்தவடிவத்தை அறிதலரிது என்பதுபற்றிக் கூறவேண்டுமோ?

[பகவானுடைய உண்மையான வடிவம் ஸச்சிதானந்தரூபம். பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கித் தனது விருப்பத்தினால் மாயாசரீரத்தை ஏற்றுக்கொள்ளுகிறார். அந்த உடல் பஞ்சபூதங்களின் விகாரமன்று. ஆயினும் எல்லோராலும் அது காணப்படுகிறது. ஆகையால் அது ஸகுணரூபம். அந்த ஸகுணரூபத்தின் உண்மையை அறிவதற்கு சித்தத்தின் தூய்மை இன்றியமையாதது. அதற்குத் தவம் முக்கிய காரணம். தவத்தினால் அடக்கியாளப்பட்ட மனதினால்கூட பகவானுடைய ஸகுணரூபத்தையே அறிதலரிது என்றால், நிர்குணரூபத்தைப்பற்றி என்ன கூற முடியும்? ஆகையால், குணவிசேஷங்களின் கூறுமைக்குக் காரணம், தன்னுடைய அசக்தி என்றும், இது பகவானுக்கு உரிய உருவமன்று என்றபோதிலும பக்தர்களுக்கு வசப்பட்ட பகவான் எத்தகைய உருவத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் சித்தமாயிருக்கிறார் என்றும

விளக்குவதால் முன்கூறிய இரண்டு ஆட்சேபங்களுக்கும் விடையளிக்கப்பட்டது.

தன்னுடைய (பிரம்மதேவருடைய) அனுக்கிரகத்திற்காக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தோற்றிய உருவங்கள் அநேகங்கள். அவைகளில் ஒரு உருவத்தின் மகிமையைக்கூட தான் உணரச் சக்தியற்றவர் என்பதை ஒருமையினால் (வபுஷ:) விளக்குகிறார். தான் விரும்பியது பயன்பட்டது என்ற கருத்தை 'மதனுக்ரஹஸ்ய' என்ற சொல்லால் காட்டுகிறார். ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய லீலைகளைக் காணக் குதூகலத்தினாலன்றோ, கன்றுகளையும் இடையச்சிறுவர்களையும் அபகரித்தார். அந்த மகிமையைக் கண்ணுற்றதினால் விருப்பம் பயனடைந்தது. ஸ்வேச்சாமயஸ்ய = தன்னைச் சேர்ந்தவர்களுடைய விருப்பப்படி விலஸிய; என்றும் பொருள்.]

[ஆத்மஞானத்தை அடைதல் மிகவும் அரிதானது பற்றி சான்றோர்கள் பக்தியில் ஈடுபடுகின்றனர். அந்த பக்தியினால் பகவானை அடைகின்றனர் என்று கூறுகிறார்:—

ज्ञाने प्रयासमुदपास्य नमन्त एव
जीवन्ति सन्मुखरितां भवदीयवार्ताम् ।
स्थाने स्थिताः श्रुतिगतां तनुवाङ्मनोभिर्ये
प्रायशोऽजित जितोऽप्यसि तैस्त्रिलोक्याम् ॥ ३

ஞானே ப்ரயாஸமுதபாஸ்ய நமந்த ஏவ
ஜீவந்தி ஸன்முகரிதாம் பவதீயவார்த்தாம் ।
ஸ்தானே ஸ்திதா: ச்ருதிகதாம் தநுவாங்மனோபிர்யே
ப்ராயசோऽஜித ஜிதோऽப்யஸி தைஸ்த்ரிலோக்யாம் ॥ 3

ஹே அஜித = யாராலும் ஜயிக்கப்படாதவரே! ஆத்மஞானத்திற்குரிய முயற்சி செய்யாவிடினும், எவர்கள் தமது இடத்தில் இருந்துகொண்டே பக்தியுடன் சான்றோர்களால்

கூறப்பட்ட உமது சரித்திரங்களைக் கேட்டு, உடலினால் பணிவிடை செய்துகொண்டும், வாக்கினால் நாமங்களைக் கூறிக்கொண்டும், மனதினால் தியானம் செய்துகொண்டும் வணங்குகின்றனரோ, அவர்களால் தாங்கள் ஜயிக்கப்படுகிறீர்கள்.

[அதிகமாக பேசுவதற்கு விருப்பமில்லாதவர்களும், அஞ்சுகிறவர்களுமாகிய சான்றோர்கள் பகவானுடைய சரித்திரத்தைச் சொல்லுவதற்கு ஸந்தர்ப்பம் ஏற்படுகையில் தடையின்றியும் ஊக்கத்துடனும் பேச்சின் வன்மையைக் காட்டுகின்றனர் என்ற கருத்தை 'ஸன்முகரிதாம்' என்ற சொல் விளக்குகிறது. நிர்குண ஆத்மஞானம் முக்திக்குக் காரணம். ஸகுணத்தின் ஞானம் நிர்குணஞானத்திற்குக் காரணம். அவதாரமூர்த்திகள் யாவும் ஸகுணங்கள். சான்றோர்கள் அவதாரங்களுடைய லீலாவிபூதிகளை கானம் செய்கையில் ஏனையோர்கள் அவைகளைக் கேட்டு பக்தியைச் செய்கின்றனர். அவர்களுடைய பக்திக்கு பகவான் வசமாகிறார். ஸகுணபக்தியினால் பகவானுடைய மகிமையை உணர்தல் எளிது. நிர்குணஞானம் கிடைப்பது அரிது. ஆகவே, பகவான் பக்தர்களுக்கு வசமாவது நிச்சயம்.]

[பக்தியின்றி ஞானமில்லை என்று கூறுகிறார்:—

श्रेयःस्रुतिं भक्तिमुदस्य ते विभो क्लिश्यन्ति ये केवलबोधलब्धये ।
तेषामसौ क्लेशल एव शिष्यते नान्यद्यथा स्थूलतुषावघातिनाम् ॥

ச்ரேய:ஸ்ருதிம் பக்திமுதஸ்ய தே விபோ
க்லிச்யந்தி யே கேவலபோதலப்தயே ।
தேஷாமஸௌ க்லேசல ஏவ சிஷ்யதே
நான்யத்யதா ஸ்தூலதுஷாவகாதினாம் ॥ 4

ஹே விபுவே! = எங்கும் நிறைந்தவரே! நன்மைகள் யாவையும் அளிக்கின்ற பக்தியைச் செய்யாமல், ஆத்மஞா

னத்தைமட்டும் அடைவதற்கு எவர்கள் முயற்சி செய்கின்றனரோ, அவர்களுடைய முயற்சிக்குப் பயன் யாதுமில்லை. கருக்காயை (பதரை) குத்தி அரிசி அடைவதற்கு முயற்சி செய்பவர்களுக்கு எவ்வாறு பயன் உண்டாவதில்லையோ, அதுபோல்.

[ஆத்மஸாக்ஷாத்காரம் முக்திக்குக் காரணம். ஆத்மஞானம் இருவிதம். பரோக்ஷம், அபரோக்ஷம் என்று. நூல்களைக் கேட்டும் கற்றும் உண்டாகும் ஞானம் பரோக்ஷம். அந்த ஞானம் ஸ்வாநுபவத்திற்கு வந்தால் அபரோக்ஷம் எனக் கூறப்படுகிறது. பித்தம் மேலிட்டு கண், நாவு இவைகள் அப்பித்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கையில், 'வெல்லம் கசப்பு, சங்கம் மஞ்சள் நிறம்' என்று கூறுகிறான். 'வெல்லம் இனிப்பு, சங்கம் வெண்மை' என்று அவன் கூறவேணுமாயின் பித்ததோஷம் நீங்கவேண்டும். அது நீங்கினால் வெல்லத்தின் உண்மையான சுவையையும், சங்கத்தின் உண்மையான நிறத்தையும் அறிந்து முறையே இனிப்பு, வெண்மை என்று கூறுகிறான். அதுபோலவே, மனம் பரமாத்மவஸ்துவை உண்மையாக அறிந்துகொள்வதற்கு நிர்மலத்தன்மை இன்றியமையாதது. ஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷமாக அறிந்துகொள்ளவேண்டுமாயின் அநுஸந்தானம் செய்யவேண்டும். அதற்கு, ரஜஸ் தமஸ் குணங்கள் நீங்கவேண்டும். ஸத்வகுணம் அதிகமாகவேண்டும். அதற்கு ஸ்வகர்மாநுஷ்டானம் முக்கியமான காரணம். பிறகு, உபாஸனை, யோகம் இவைகளும் உபயோகப்படுகின்றன. சித்தம் பகவானைச் சிந்திக்கவேண்டுமாயின் அவருடைய குணவிசேஷங்களை அறிந்துகொள்ளுதல் மிக்க அவசியம். அந்த பகவான் ஸத்வகுணமூர்த்தியாகப் பல லீலைகளைக் காண்பித்துள்ளாரன்றோ! அவைகளைச் சான்றோர்கள் பக்திபரவசர்களாகக் கீர்த்தனம் செய்கிறார்கள். அதனைக் கேட்பதினால்

பக்தி உண்டாகிறது. அந்த பக்தி உபாஸனைக்கு அநுகூல மாகிறது. உபாஸகனுடைய உபாஸனைக்குத் தக்கபடி பக வான் அருள்செய்கிறார். அவருடைய அருளினால் ஞானோ தயம் நிகழ்கிறது. ஆகையால், பக்திதான் முக்திஸாதன மாகிய ஞானத்தைத் தருகிறது.]

[மேற்கூறிய விஷயத்திற்கு ஆதாரமாக சான்றோர்க ளின் ஆசரணையைக் கூறுகிறார் :—

पुरेह भूमन् बहवोऽपि योगिनस्त्वदर्पितेहा निजकर्मलब्धया ।
विबुध्य भक्त्यैव कथोपनीतया प्रपेदिरेऽञ्जोऽच्युत ते गतिं पराम् ॥

புரேஹ பூமன் பஹவோऽபி யோகிந:
த்வதர்ப்பிதேஹா நிஜகர்மலப்தயா ।
விபுத்ய பக்த்யைவ கதோபநீதயா
ப்ரபேதிரேऽஞ்ஜோऽச்யுத தே கதிம் பராம் ॥ 5

பூமன் = அளவிடமுடியாதவரே! அச்சுதா = அழிவற் றவரே! முன்காலத்தில் அநேக யோகீசுவரர்களும், தமது யோகப்பயிற்சியினால் உங்களை அறிய முயன்றும் பயன்பெறா மல் தமது செயல் யாவற்றையும் உமக்கே அர்ப்பணம் செய் து, அதனால் உமது அருள் கிடைக்க, உமது லீலைகளைக் கேட்டுணர பக்தி சித்தித்து அந்த பக்தியினாலேயே உம்மை யே சிறந்த பதவியாகப் பிரயாஸமின்றி அடைந்தனர்.

[எவருடைய பக்தர்கள் மகாப் பிரளயமாகிய பேரா பத்திலகூட நாசமடைகிறார்களில்லையோ, அத்தகைய பக வான், அச்சுதன் எனக் கூறப்படுகிறார். அவர் எங்கும் வியாபித்தவர். குறைவில்லாதவர் என்று பொருள்.

न च्यवन्तेऽथ यद्भक्ता महत्यां प्रलयापदि ।
अतोऽच्युतः स्मृतो लोके त्वमेको विष्णुरव्ययः ॥

ந ச்யவந்தேऽஸ்ய யத்பக்தா மஹத்யாம் ப்ரலயாபதி ।
அதோऽச்யுதः ஸ்ம்ருதோ லோகே
த்வமேகோ விஷ்ணுரவ்யய: ॥ என்று கூறப்பட்டுள்ளது.]

[ஸகுணம் நிர்குணம் என்ற இரு உருவங்களும் எளிதில் அறியமுடியாதவைகளாயினும் நிர்குணரூபத்தையாவது மிக்கச் சிறந்த யோகப்பயிற்சியினால் அறிந்துகொள்ளலாம். ஆனால் ஸகுணரூபம் எண்ணிறந்தமையால் அவ்வாறு அறிதற்கரிது என்கிறார் :—

तथाऽपि भूमन् महिमाऽगुणस्य ते विबोद्धुमर्हत्यमलान्तरात्मभिः ।
अविक्रियात् स्वानुभवादरूपतो ह्यनन्यबोध्यात्मतया न चान्यथा ॥

ததாऽபி பூமன் மஹிமாऽகுணஸ்ய தே
விபோத்துமர்ஹத்யமலாந்தராத்மபி: ।
அவிக்ரியாத் ஸ்வானுபவாதரூபதோ
ஹ்யநன்யபோத்யாத்மதயா ந சான்யதா ॥ 6

பூமன் = எங்கும் வியாபித்தவரே! சிலர் தமது செயல்களை உங்களுக்கு அர்ப்பணம் செய்வதின் பயனாக பக்தியடைந்து தங்களை அடைந்தபோதிலும், ஒருவன் நிர்குணமான உமது உருவத்தை பரிசுத்தமான மனதினாலும் பொறிகளாலும் அறியத்தகுதியுள்ளவனாக இருக்கிறான். பொறிகளையும் மனதையும் அடக்கினால் உமது நிர்குண உருவத்தின் மகிமை அறியத்தக்கதாக ஆகிறது. மனதை மற்றப்பொருள்களிலிருந்து விலக்குகையில் விகாரமற்றதாக ஆகிறது. உருவமற்றதாகவும் ஆகிறது. அப்பொழுது அந்த மனம் ஸ்வஸ்வரூபமாகிய நிர்குணத்தை அநுபவிக்கின்றது. மற்றப்பொருள்களின் சம்பந்தம் விலகவே ஆத்மஸ்வரூபம் தானாகவே பிரகாசிக்கிறது. ஏனெனில், விகாரமுள்ள மற்றப் பொருள்களை 'இத்தகையவை இவை' என்று அறிவது

போல் ஆத்மஸ்வரூபம் அறியத்தக்கதல்ல. பொருள்களின் சம்பந்தம் விலகிய ஸமாதிநிஷ்டையில் ஆத்மவஸ்து ஸ்வயம் பிரகாசமாக விளங்குகிறது.

அகுணஸ்ய=குணமற்ற, தே=உமது, மஹி=மகிமையை, மா=லக்ஷ்மீதேவி (உமது அந்தரங்க பிரிய மனைவியாகிய திருமகள்கூட) அறியவல்லமையுள்ளவளா? இல்லை என்றும் பொருள்.

गुणात्मनस्तेऽपि गुणान् विमातुं हितावतीर्णस्य क ईशिरेऽस्य ।
कालेन यैर्वा विमिताः सुकल्पैर्भूपांसवः खे मिहिका द्युभासः ॥ ७

குணாத்மநஸ்தேऽபி குணான் விமாதும்
ஹிதாவதீர்ணஸ்ய க ஈசிரேஸ்ய ।
காலேன யைர்வா விமிதா: ஸுகல்பை:
பூபாம்ஸவ: கே மிஹிகா த்யுபாஸ: ॥ 7

இந்த உலகத்தின் நன்மைக்காக அவதரித்த உமது எண்ணிலாக் குணங்களை 'இவ்வாறு, இவ்வளவு' என்று அறிந்துகொள்ள வல்லமையுள்ளவர்கள் எவர்கள் உளார்? மிக வன்மையுள்ளவர்கள் காலக்கிரமத்தில் தமது வன்மையினால் பூமியிலுள்ள தூசிகளையும், ஆகாயத்திலுள்ள பனித் துளிகளையும், நக்ஷத்திரங்களையும் எண்ணிக் கணக்கிடமுடியும். ஆனால் அவர்களால் உமது குணங்களை அளவிடமுடியாது.

பக்தியே முக்திக்குப் போதுமான ஸாதனம் என்று கூறுகிறார்:—

तत्तेऽनुकम्पां सुसमीक्षमाणो भुञ्जान एवात्मकृतं विपाकम् ।
हृद्वाग्वपुर्भिर्विदधन्नमस्ते जीवेत यो मुक्तिपदे स दायभाक् ॥ ८

தத்தேநுகம்பாம் ஸுஸமீக்ஷமாணோ
புஞ்ஜான ஏவாத்மக்ருதம் விபாகம் ।

ஹ்ருத்வாக்வபுர்ப்பிர்விததன் நமஸ்தே
ஜீவேத யோ முக்திபதே ஸ தாயபாக் ॥ 8

ஆகையால், உமது அனுக்கிரகத்தைப் பணிவுடன் எதிர்பார்த்துக்கொண்டும், மனம் வாக்கு உடல் ஆகிய த்ரிகரணங்களால் உமக்கு வணக்கம் செலுத்திக்கொண்டும் ஜீவித்திருக்கின்றவன் நிச்சயமாக முக்திசுகத்திற்கு உரியவனாகிறான்.

[ஒருவன் உயிருடன் இருந்தாலேயே முன்னோர்களுடைய செல்வத்திற்கு உரிமை பெறுவதுபோல், மேற்கூறிய விதம் வாழ்க்கை நடத்துகிறவன் மோட்சசுகத்திற்கு உரியவனாகிறான். உடலை வருத்திகொண்டு கடூரமான தவம் ஹடயோகம் முதலியன செய்யவேண்டியதவசியமில்லை.]

[இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் துதிசெய்து தான் செய்த பிழையைக் கூறி பொறுக்கும்படி வேண்டுகிறார் :—

पश्येश मेऽनार्यमनन्त आद्ये परात्मनि त्वय्यपि मायिमायिनि ।
मायां वितत्येक्षितुमात्मवैभवं ह्यहं कियानैच्छमिवार्चिरग्नौ ॥ ९

अतः क्षमस्वाच्युत मे रजोभुवो ह्यजानतस्त्वत्पृथगीशमानिनः ।
अजावलेपान्धतमोऽन्धचक्षुष एषोऽनुकम्प्यो मयि नाथवानिति ॥

பச்யேச மேऽநார்யமனந்த ஆத்யே
பராத்மநி த்வய்யபி மாயிமாயிநி ।
மாயாம் விதத்யேக்ஷிதுமாத்மவைபவம்
ஹ்யஹம் கியாநைச்சமிவார்ச்சிரக்நௌ ॥ 9

அத: க்ஷமஸ்வாச்யுத மே ரஜோபுவோ
ஹ்யஜானதஸ்த்வத்ப்ருதகீசமாநிந: ।
அஜாவலேபாந்ததமோऽந்தசக்ஷுஷ
ஏஷோऽநுகம்ப்யோ மயி நாதவாநிதி ॥ 10

ஹே! ஈசா! என்னுடைய துஷ்டச்செயலைப் பாருங்கள். அளவற்றவரும், எல்லாவற்றிற்கும் முதல்வரும், பரமாத்மனும், மாயாவிகளுக்கு மாயாவியுமாகிய உம்மிடத்திலேயே என்னுடைய மாயையின் விலாஸத்தை உபயோகித்து என்னுடைய வன்மையைப் பரீட்சை செய்ய விரும்பினேன். பெருந்தீயிலிருந்து கிளம்பிய ஒரு சிறிய பொறி அந்தப் பெருந்தீயில் எம்மாத்திரம்? ஆகையால், அச்சுதா! ரஜோகுணத்தை முக்கியமாகக்கொண்டவனும், அறிவு குன்றியவனும், 'உம்மைக்காட்டிலும் மேலான வன்மை வாய்ந்தவன் நான், ஈசுவரன்' என்ற செருக்கடைந்தவனும், "நான் பிரம்மதேவன்" என்ற இறுமாப்பினால் விவேகமிழந்தவனுமாகிய என்னை மன்னிப்பீர்களாக. 'இவன் மற்றவர்களுக்கு நாயகனாயினும் நான இருக்கையில் என்னால்தான் இவனுக்குப் பாதுகாப்பு" என்று, என் மீது கருணைகூறவேண்டும்.

क्वाहं तमोमहदहंखचराग्निवार्भू-
संवेष्टिताण्डघटसप्तवितस्तिकायः ।
क्वेदृग्विधाविगणिताण्डपराणुचर्या-
वाताध्वरोमविवरस्य च ते महित्वम् ॥ ११

க்வாஹம் தமோமஹதஹம்கசராக்னிவார்பூ-
ஸம்வேஷ்டிதாண்டகடஸப்தவிதஸ்திகாய: ।
க்வேதிருக்விதாவிகணிதாண்டபராணுசர்யா-
வாதாத்வரோமவிவரஸ்ய ச தே மஹித்வம் ॥ 11

பிரகிருதி, மஹத்தத்துவம், அகங்காரம், ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி ஆகியவைகளால் அமைந்த பிரம்மாண்டமாகிய ஒரு இடத்தில் ஏழு சாண் அளவுள்ள உடலையுடையவனாகிய நான் எங்கே! இத்தகைய அநேக பிரம்மாண்டங்கள் ஒரு சிறு பரமாணுவாக ஸஞ்சரிக்கத்

தகுதியுள்ள ஜன்னல்போன்ற உரோமதுவாரத்தை உடையரான தங்களுடைய மகிமை எங்கே! ஒரு உரோமதுவாரம் ஜன்னலுக்குச் சமமாகவிருக்கிறது. அதன் வழியாக எண்ணில்லாப் பிரம்மாண்டங்கள் பரமாணுபோல் உலாவுகின்றன. அவ்வாறு கணக்கிடமுடியாத உரோமதுவாரங்களுள்ள உமது மகிமை எத்தகையது!

उत्क्षेपणं गर्भगतस्य पादयोः किं कल्पते मातुरधोक्षजागसे ।
किमस्तिनास्तिव्यपदेशभूषितं तवास्ति कुक्षेः कियदप्यनन्तः ॥

உத்க்ஷேபணம் கர்ப்பகதஸ்ய பாதயோ:
கிம் கல்பதே மாதுரதோக்ஷஜாகஸே ।
கிமஸ்தி நாஸ்தி வ்யபதேசபூஷிதம்
தவாஸ்தி குக்ஷே: கியதப்யநந்த: ॥ 12

அதோக்ஷஜ=பொறிகளுக்குப் புலனாகாதவரே! கருவிலிருக்கும் சிசு கால்களால் தாயை மிதித்தால் தாய்க்கு அது ஒரு குற்றமாகுமோ? (கால்களால் மிதித்தல் தவிர்க்கமுடியாத காரியம், உமது உதரத்தில் இருக்கும் எனது செயல், அதற்குச் சமானம்.) ஸத்து, அஸத்து என்றும், அல்லது ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்றும் கூறத்தக்க உலகிலுள்ள எந்தப் பொருள்தான் உமது குக்ஷியிலில்லாமல் வெளியே இருக்கிறது? யாதுமில்லை. (எல்லாப் பொருள்களும் உமது வயிற்றினுள் உள்ளவையே.) ஆகையால், கருவிலிருக்கும் சிசுவின் செயல் (உதைத்தல்) தாய்க்குப் பிழையாகாதது போல், உமது உதரத்தில் வஸிக்கும் எனது செயல் தங்களுக்குப் பிழையாகாதன்றோ!

[மேலும், உம்மிடமிருந்துதான் நான் தோன்றியுள்ளேன் என்று கூறுகிறார்:—

जगत्त्रयान्तोदधिसंप्लवोदे
नारायणस्योदरनाभिनालात् ।

विनिर्गतोऽजस्त्विति वाङ्न वै मृषा
किं त्वीश्वर त्वन्न विनिर्गतोऽस्मि ॥ १३

ஜகத்ரயோதத்திஸம்ப்லவோதே
நாராயணஸ்யோதரநாபிநாளாத் ।
விநிர்கதோऽஜஸ்த்விதி வாங்ந வை ம்ருஷா
கிம் த்வீச்வர த்வந்ந விநிர்கதோऽஸ்மி ॥ 13

'மூன்று உலகங்களுக்கும் அழிவுண்டாகும்பொழுது ஏற்பட்ட பிரளயகாலஸமுத்திரத்தில் சயனம்செய்த நாராயணனுடைய நாபியிலிருந்து பிரம்மதேவன் தோன்றினன்' என்ற சொல் பொய்யல்ல. ஹே! ஈசுவர! நான் உம்மிடமிருந்து தோன்றவில்லையா?

[ஆகவே, நீர் நாராயணனுடைய புதல்வன். அப்படியிருக்கையில் என்னுடன் ஸம்பந்தம் யாது? என்ற ஆட்சேபம் எழ பதில் கூறுகிறார் :—

नारायणस्त्वं न हि सर्वदेहिनामात्माऽस्यधीशाखिललोकसाक्षी ।
नारायणोऽङ्गं नरभूजलायनात्तच्चापि सत्यं न तवैव माया ॥ १४

நாராயணஸ்த்வம் ந ஹி ஸர்வதேஹி-
நாமாத்மாऽஸ்யதீசாகிலலோகஸாக்ஷீ ।
நாராயணோऽங்கம் நரபூஜலாயனாத்-
தச்சாபி ஸத்யம் ந தவைவ மாயா ॥ 14

ஹே அதீச=எல்லாவற்றையும் நடத்துகிறவரே! தாங்கள் நாராயணனன்றோ? எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவன்றோ? எல்லாவற்றையும் நேரில் பார்க்கின்றவர் தாங்கள் தான். நரனிடமிருந்து=ஆத்மாவினிடமிருந்து உண்டானது ஜலம். அதில் அயனர்=படுத்தவர் (ஆச்ரயமாகக் கொண்டவர்) ஆகையால் நாராயணன் என்ற பெயர். அந்த

மூர்த்தி உம்முடையதேயாகும். ஆயினும், அது உண்மையானதல்ல. உமது மாயையினால் தோன்றியதுதான். அந்த உருவத்திலிருந்து தோன்றிய நான் உமது புதல்வனன்றோ?

तच्चेज्जलस्थं तव सज्जगद्वपुः किं मे न दृष्टं भगवंस्तदैव ।
किं वा सुदृष्टं हृदि मे तदैव किं नो सपद्येव पुनर्व्यदर्शि ॥ १५

தச்சேஜ்ஜலஸ்தம் தவ ஸஜ்ஜகத்வபு:
கிம் மே ந த்ருஷ்டம் பகவம்ஸ்ததைவ ।
கிம் வா ஸுத்ருஷ்டம் ஹ்ருதி மே ததைவ
கிம் நோ ஸபத்யேவ புனர்வ்யதர்சி ॥ 15

ஜலத்தில் வாஸஞ்செய்ததும், உலகங்களுக்கு ஆதாரமுமாகிய அந்த உருவம் மாயையினால் கற்பிக்கப்படாத உண்மையாகில், தாமரைத்தண்டின் வழியாக நான் புகுந்து நூறு வருஷகாலம் தேடியும் எனக்கு ஏன் புலப்படவில்லை? ஸத்தியமான பொருளாகில் புலப்பட்டிருக்கவேண்டுமன்றோ? முதலில் மனதிலும் விளங்காத அந்த உருவம் வெகு காலம் நான் தவஞ்செய்தபின் தென்பட்டது. தங்களை தியானம் செய்ததின் பயனாக தங்களுடைய அருளினால் புலப்பட்ட அந்த உருவம் தங்களுடைய மாயையினால் கற்பிதமானது, என்று நிர்மாணம். அந்த உருவம் உம்முடையது என்பதில் ஐயமில்லை. உமது மாயையினால் தோன்றிய உருவத்தின் மகிமை அறிதற்கரிது என்பதும் நிச்சயம். பகவன் = தேசத்தாலும், காலத்தாலும் அளவிடமுடியாத ஐசுவரியம் உடையவரே! (இந்தச் சொல், அவருடைய மாயாவிலாஸத்தின் ஒப்புயர்வற்ற நிலைமையை விளக்குகிறது).

अत्रैव मायाधमनावतारे ह्यस्य प्रपञ्चस्य बहिः स्फुटस्य ।
कृत्स्नस्य चान्तर्जठरे जनन्या मायात्वमेव प्रकटीकृतं ते ॥ १६

அத்ரைவ மாயாதமனுவதாரே
ஹ்ஸ்ய ப்ரபஞ்சஸ்ய பஹி: ஸ்புடஸ்ய ।
க்ருத்ஸ்னஸ்யசாந்தர்ஜடரே ஜனன்யா
மாயாத்வமேவ ப்ரகடீக்ருதம் தே ॥ 16

மாயாதமன = மாயையை நாசஞ்செய்யும் வல்லமையுடையவரே! (தோற்றுவிப்பதற்கும் நாசஞ்செய்வதற்கும் சக்தியுள்ளவர்). இந்த அவதாரத்திலேயே, வெளியெ புலப்படுகிற பிரபஞ்சம் யாவற்றையும் தாயாருக்கு மாயையினுல் உமது உதரத்தில் தோற்றுவித்தீரன்றோ! ஆகையால், பிரபஞ்சம் யாவும் உமது மாயாவிலாஸத்தினுல் தோன்றியுள்ளது என்பது நிச்சயம்.

[வெளியே தோன்றிய பிரபஞ்சம் பிரதிபிம்பமாக எனது உதரத்தில் தோன்றியதேயன்றி மாயையினுலல்ல என்று ஏன் கூறக்கூடாது? என்ற ஆக்ஷேபத்திற்கு விடை கூறுகிறுர்:—

यस्य कुक्षाविदं सर्वं सात्मं भाति यथा तथा ।
तत्त्वय्यपीह तत् सर्वं किमिदं मायया विना ॥ १७

யஸ்ய குக்ஷாவிதம் ஸர்வம் ஸாத்மம் பாதி யதா ததா ।
தத்வய்யபீஹ தத் ஸர்வம் கிமிதம் மாயயா விநா ॥ 17

தங்களுடைய குக்ஷியில் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியதோ, அவ்வாறே வெளியேயும் தோன்றியது. மேலும், மற்றப் பிரபஞ்சம்போல் தங்களுடைய உருவமும் தமது உதரத்தில் தோன்றியது. கண்ணுடியில் பிரதிபிம்பம் தோன்றுகையில், கண்ணுடி அதில் அவ்வாறு தோன்ருது. பிரதிபிம்பம் கண்ணுடியில் தோன்றுகையில் பிம்பத்தைவிட இடதுவலதுபாகங்கள் மாறுபட்டுத் தோன்றும். உமது உதரத்தில் மாறுபாடின்றி தோன்றியமையால் அதனைப் பிரதி

பிம்பம் என்று கூறமுடியாது. உமது மாயையின் விலாஸம் என்றே கூறவேண்டும்.

[உம்மைத்தவிர மற்றவையெல்லாம் மாயையினால் உண்டானது என்பது, தாயாருக்கு மட்டுமல்ல, எனக்கும் காண்பிக்கப்பட்டது என்று விளக்குகிறார்:—

अद्यैव त्वदृतेऽस्य किं मम न ते मायात्वमादर्शित-
मेकोऽसि प्रथमं ततो व्रजसुहृद्वत्साः समस्ता अपि ।
तावन्तोऽसि चतुर्भुजास्तदखिलैः साकं मयोपासिता-
स्तावन्त्येव जगन्त्यभूस्तदमितं ब्रह्माद्वयं शिष्यते ॥ १८

அத்யைவ த்வத்ருதேऽஸ்ய கிம் மம ந தே
மாயாத்வமாதர்சித-
மேகோऽஸி ப்ரதமம் ததோ வ்ரஜஸுஹ்ருத்-
வத்ஸா: ஸமஸ்தா அபி ।
தாவந்தோऽஸி சதுர்புஜாஸ்ததகிலை:
ஸாகம் மயோபாஸிதா-
ஸ்தாவந்த்யேவ ஜகந்த்யபூஸ்ததமிதம்
ப்ரம்மாத்வயம் சிஷ்யதே ॥ 18

இப்பொழுதே தங்களைத்தவிர மற்றவைகள் மாயிகங்கள் என்று தங்களால் எனக்கு காண்பிக்கப்படவில்லையா? முதலில் தாங்கள் ஒருவர் மட்டுமிருந்தீர்கள். பிறகு, கோகுலத்திலுள்ள எல்லா நண்பர்களாகவும் தோற்றமளித்தீர்கள். அதன் பின் அவ்வளவு உருவங்களும் நான்கு புஜங்களுள்ள வைகுண்டநாதரின் உருவங்களாக மாறின. அந்த திவ்ய ரூபங்கள் யாவும் அணிமாதியோகஸித்திகளுடன் என்னால் சேவிக்கப்பட்டன. இத்தகைய காக்ஷியினால் தாங்களே எண்ணில்லாப் பிரம்மாண்டங்களாகத் தோன்றுகிறீர்

கள் என்பது திண்ணம். ஆகவே, நிகரற்ற அந்தப் பரம் பொருள் ஒன்றுதான் நிலையுள்ளது. ஏனெனில், கடைசியில் ஒரு உருவம் மாத்திரம்தான் மீதியாயிற்று.

[நிகரற்ற பரம்பொருளாகிய பரமாத்மவஸ்து ஒன்றே நிலையுள்ள நிஜமான வஸ்து, மற்றவையெல்லாம் மாயையினால் உண்டான விகாரங்கள் என்பதை உதாரணத்துடன் விளக்குகிறார்:—

आजानतां त्वत्पदवीमनात्मन्यात्माऽऽत्मना भासि वितत्य मायाम् ।
सृष्टाविवाहं जगतो विधान इव त्वमेषोऽन्त इव त्रिनेत्रः ॥ १९

सुरेष्वृषिष्वीश तथैव नृष्वपि तिर्यक्षु यादःस्वपि तेऽजनस्य ।
जन्मासतां दुर्मदनिग्रहाय प्रभो विधातः सदनुग्रहाय च ॥ २०

அஜானதாம் த்வத்பதவீமநாத்ம-
ந்யாத்மாத்மநா பாஸி விதத்ய மாயாம் ।
ஸ்ருஷ்டாவிவாஹம் ஜகதோ விதான
இவ த்வமேஷோऽந்த இவ த்ரிநேத்ர: ॥ 19

ஸுரேஷ்வ்ருஷிஷ்வீச ததைவ ந்ருஷ்வபி
திர்யக்ஷு யாத:ஸ்வபி தேऽஜனஸ்ய ।
ஜன்மாஸதாம் துர்மதநிக்ரஹாய
ப்ரபோ விதாத: ஸதனுக்ரஹாய ச ॥ 20

உமது உண்மையான நிலைமையை அறியாமலிருக்கும்படி மறைக்கும் தன்மையுள்ள பிரகிருதி என்ற மாயையை அடைந்து, அதனுடைய சம்பந்தத்தினால் உலகங்களை ஆக்குவதற்கு பிரம்மன் என்ற நானாகவும், ஆளுவதற்குத் திருமாலாகிய தாங்களாகவும், அழிப்பதற்கு முக்கண்ணனாகிய மஹாதேவனாகவும், அக்ஞானிகளுக்கு எவ்வாறு விளங்குகிறீர்களோ, அவ்வாறே, ஹே ஈசா! தீயவர்களை நிக்கிரகம்

செய்வதற்கும், நல்லவர்களை அனுக்கிரகம் செய்வதற்கும், பிறவியற்றவராயினும் தேவர்களிடத்திலும், முனிவர்களிடத்திலும், மனிதர்களிடத்திலும், விலங்குகளிடத்திலும், ஜலஜந்துக்களிடத்திலும் பிறவியை அடைந்தவர்களாகத் தோன்றுகிறீர்கள். விதாத:=உலகத்தை ஆக்கும் தன்மையுள்ளவரே! பிரபோ=எல்லா வல்லமையுமுள்ளவரே! என்ற இரண்டு விசேஷணங்களால், தங்களுக்கரிதான செயல் ஒன்றுமில்லை, என்று விளக்குகிறார்.

[பகவான் சுவாதந்திரியம் உள்ளவராயின், மீன் முதலிய பிறப்பை ஏன் அடையவேண்டும்? வாமனாவதாரத்தில் யாசித்தல் ஏன்? கிருஷ்ணாவதாரத்தில் பயந்து தனது இடம் விட்டு (மதுராநகரத்தை விட்டு) ஏன் ஒளிந்துகொள்ளவேண்டும்? என்ற ஆட்சேபங்கள் எழ விடை கூறுகிறார்:—

को वेत्ति भूमन् भगवन् परात्मन् योगेश्वरोतीर्भवतस्त्रिलोक्याम् ।
क्व वा कथं वा कति वा कदेति विस्तारयन् क्रीडसि योगमायाम् ॥

கோ வேத்தி பூமன் பகவன் பராத்மன்
யோகேச்வரோதீர்பவதஸ்த்ரிலோக்யாம் ।
க்வ வா கதம் வா கதி வா கதேதி
விஸ்தாரயன் க்ரீடஸி யோகமாயாம் ॥ 21

பூமன்=எங்கும் வியாபித்தவரே! பகவன்=ஆறு குணங்கள் நிறைந்தவரே! (பூர்த்தியான ஐசுவரியம், தருமம், கீர்த்தி, அழகு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்கள்) பரமாத்மாவே! யோகேசுவரரே! மூவுலகங்களிலும் தங்களுடைய லீலைகள் ‘எங்கே, எவ்வாறு, எவ்வளவு, எப்பொழுது நிலவுகின்றன என்று எவன் அறிவான்? ஒருவனுமில்லை. தாங்கள் யோகசக்தியின் வன்மையால் மாயையைப் பரப்பிக்கொண்டு விளையாடுகிறீர்கள். தங்களுடைய

செய்கைகளின் அபிப்பிராயத்தை உணரவல்லவன் யாருமில்லை.

[அவதாரங்களின் சிறப்பு அறிய முடியாதது என்பது இருக்கட்டும்; பிரபஞ்சத்தின் உண்மை நிலைமைக்கே காரணம் ஸத்யரூபியான பகவான்தான் என்று விளக்குகிறார் :—

तस्मादिदं जगदशेषमसत्स्वरूपं
स्वप्नाभमस्तधिषणं पुरुदुःखदुःखम् ।
त्वय्येव नित्यसुखबोधतनावनन्ते
मायात उद्यदपि यत् सदिवावभाति ॥ २२

தஸ்மாதிதம் ஜகதசேஷமஸத்ஸ்வரூபம்
ஸ்வப்நாபமஸ்ததிஷணம் புருதுக்கதுக்கம் ।
த்வய்யேவ நித்யஸுகபோததநாவனந்தே
மாயாத உத்யதபி யத் ஸதிவாவபாதி ॥ 22

அஸத்தும் = தோற்றத்திற்கு உரியதல்லாததும், கனவிற்குச் சமானமும், மிக்க துக்கரூபமுமாகிய இந்த உலகம் முழுதும் உமது மாயையினால் உண்டாகி, நித்தியஸுகஸ்வரூபியும், ஞானரூபியும், முடிவற்றவருமாகிய உம்மையே அதிஷ்டாதாவாகக்கொண்டமையால் (ஆச்ரயமாகக்கொண்டதினால்) ஸத்தான பொருளாக விளங்குகின்றது.

एकस्त्वमात्मा पुरुषः पुराणः सत्यः स्वयंज्योतिरनन्त आद्यः ।
नित्योऽक्षरोऽजस्रसुखो निरञ्जनः पूर्णोऽद्वयो मुक्त उपाधितोऽमृतः ॥

ஏகஸ்த்வமாத்மா புருஷ: புராண:
ஸத்ய: ஸ்வயம்ஜ்யோதிரனந்த ஆத்ய: ।
நித்யோऽக்ஷரோऽஜஸ்ரஸுகோ நிரஞ்ஜன:
பூர்ணோऽத்வயோ முக்த உபாதிதோऽம்ருத: ॥ 23

தாங்கள்தான் ஸத்தியம். ஏனெனில், ஆத்மா = ஞானரூபி; மற்றவைகள் ஞானத்திற்கு விஷயங்கள். ஆகையால்

திருச்யங்கள். திருச்யங்கள் யாவும் நிலையற்றவை. ஆதியிலுள்ளவர் = காரணத்தினல் உண்டாகாதவர். பிரகிருதியும் அவ்விதமாயினும், அந்தம் = நாசம் உள்ளது. தாங்கள் அனந்தர் = முடிவற்றவர். புராணர் = காலத்தினல் முதுமை அடையாதவர். புராபி நவ: = பழையகாலத்தியராயினும் புதியவர். புருஷர் = பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னமேயே இருக்கிறவர். சரீரங்களாகிய புரங்களில் சயனம் செய்கிறவர். நித்யர் = சில பொருட்கள், உண்டான பின் வெகுகாலம் நிலைத்திருப்பதுபற்றி அழிவற்றவை எனப்படுகின்றன. அப்படியின்றி, அநாதிகாலத்திலிருந்தே காரணமின்றி ஸ்திரமாக இருப்பவர். பூர்ணர் = எங்கும், எக்காலத்திலும் வியாபித்தவர். அஜஸ்ரஸுக: = மாறுபாடின்றி எப்பொழுதும் சுகரூபி. அக்ஷரர் = குறையற்றவர். அம்ருதர் = நாசமற்றவர். அத்வயர் = நிகரற்றவர். உபாதித: முக்த: = உபாதியற்றவர். ஆச்ரயமற்றவர் = மற்ற பொருளினல் விளங்கும் தன்மையற்றவர். காலத்தினுலும், இடத்தினுலும், பொருளினுலும் அளக்கமுடியாதவர். நிரஞ்சனர் = கர்மங்களினல் பாதிக்கப்படாதவர். ஸ்வயம் ஜோதி: = ஸ்வயம் பிரகாசர்.

[தர்மி = பொருள் ஒன்றுயினும், தர்மங்கள் = குணங்கள் மாறுபடுகின்றன. ஆகையால், பலவிசேஷணங்களால் விளக்கம்.]

[இவ்விதம் பகவானுடைய தத்துவத்தை அறிந்தவர் முக்திபெறுகின்றனர் என்று கூறுகிறார்:—

एवंविधं त्वां सकलात्मनामपि स्वात्मानमात्मात्मतया विचक्षते ।
गुर्वर्कलब्धोपनिषत्सुचक्षुषा ये ते तरन्तीव भवानृताम्बुधिम् ॥ २४

ஏவம்விதம் த்வாம் ஸகலாத்மனுமபி ஸ்வா-
த்மானுமாத்மாத்மதயா விசக்ஷதே ।

குர்வர்கலப்தோபநிஷத்ஸுசக்ஷுஷா
யே தே தரந்தீவ பவாந்ருதாம்புதிம் ॥ 24

எல்லோருக்கும் ஆத்மாவாகிய இத்தகைய உங்களை குருவாகிய கதிரவனால் கிடைத்த உபநிஷத்துக்களின் அறிவாகிய நல்ல கண்ணினால் எவர்கள் தன்னுடைய (ஜீவனுடைய) ஆத்மாவாக அறிந்து ஸாக்ஷாத்காரம் செய்கின்றனரோ, அவர்கள் பொய்யான இந்த ஸம்ஸாரக்கடலைத் தாண்டுகின்றனர்போலும்.

[ஆத்மாக்களுக்கு ஸ்வாத்மா என்று கூறுவதின் கருத்து. தேகாபிமானமுள்ளவன் தனது மனைவி, புதல்வன் முதலியவற்றில் பற்றுள்ளமையால் அவர்களுடைய நன்மைதீமைகளைத் தன்னுடையதாகக் கருதி இன்பதுன்பங்களை அனுபவிக்கிறான். அவைகள் கௌணமான 'ஆத்மா'. அப்படியின்றி ஸத்யமான ஆத்மா பரமனுகையால் 'ஸ்வாத்மா' என்று கூறினர். அந்தப் பரமனின்றி ஜீவனுடைய ஒரு வியவகாரமும் நிறைவேறுகிறதில்லை. ஸ்வபிதி= தூங்குகிறான் என்றசொல்லிற்கு ஸ்வம்=தன்னை, அபீத:= அடைந்தவனாக (அதில் லயித்தவனாக) இருக்கிறான் என்று உபநிஷத்தில் பொருள் கூறப்பட்டுள்ளது. துயிலுங்காலத்தில் ஜீவன் பரமாத்மவஸ்துவில் லயித்தபோதிலும், பூர்வகர்மங்களாலும், காலத்தினாலும், கர்மவாஸனையாலும் காலையில் விழிப்படைகிறான். இரவு ஆனந்தமாகத் தூங்கினேன் என்றும் கூறுகிறான். அந்த ஆனந்தம் பரமானந்தமாகிய 'முக்தி'க்கு உதாரணமும், அதனுடைய ஒரு லவலேசமானது என்பதும்போன்ற விஷயங்கள் உபநிஷத்துக்களில் விளக்கப்பட்டுள்ளன. விரிதலுக்கு அஞ்சி அந்த விஷயத்தைச் சுருக்கினேம். மனைவி, புதல்வன் மற்றவைகளை 'ஆத்மாவாக' வியவகாரம் செய்தபோதிலும் துயிலுங்கால்

அவைகளில் லயமடைவதில்லை என்பது நிச்சயமல்லவா? 'இந்தப் பையன் சிங்கம்' என்று சிங்கத்தின் தைரியம் முதலிய குணங்களை முன்னிட்டுக் கூறுகிறோம். ஆகையால், பையன் கௌண சிங்கம். அதுபோலவே புதல்வன் முதலானவர்கள் கௌண ஆத்மாக்கள். பரமன் அவ்வாறு அல்லன். அவரே எல்லோருக்கும் உண்மையான ஆத்மா, 'அவரின்றிப் புல்லும் அசையாது'. ஆகையால் 'ஸ்வாத்மா' என்று கூறப்பட்டது.]

आत्मानमेवात्मतयाऽविजानतां तेनैव जातं निखिलं प्रपञ्चितम् ।
ज्ञानेन भूयोऽपि च तत्प्रलीयते रज्ज्वामहेर्भोगभवाभवौ यथा ॥ २५

ஆத்மாநமேவாத்மதயாऽவிஜாநதாம்
தேநைவ ஜாதம் நிகிலம் ப்ரபஞ்சிதம் ।
ஞாநேந பூயோऽபி ச தத்ப்ரலீயதே
ரஜ்ஜ்வாமஹேர்ப்போகபவாபவௌ யதா ॥ 25

ஆத்மாவை ஆத்மாவாக அறியாதவர்களுக்கு அந்த அஞ்ஞானத்தினால் எல்லாப் பிரபஞ்சமும் தோன்றுகிறது. உண்மையாக அந்த ஆத்மாவை அறிந்தபிறகு அந்த தத்துவஞானத்தினால் அந்தப் பிரபஞ்சம் லயமடைகிறது. அதற்கு உதாரணம், கயிற்றைக் கயிறாக உணராதவனுக்கு அந்த அஞ்ஞானத்தினால் அதைக் கண்ணுறுகையில், பாம்பு என்ற பிரமை உண்டாகிறது. அப்பொழுது அதில் பாம்பின் உடல் தோன்றுகிறது. நடுக்கம் உண்டாகிறது. பிறகு, நண்பனால் உணர்த்தப்பட்டு 'கயிறு' என்று உண்மையாக அறிந்து கொள்ளுகையில், பாம்பின் தோற்றம் நாசமடைகிறது. பாம்பின் உருவமும் நாசமடைகிறது. நடுக்கம் நீங்குகிறது. இந்த விஷயம் அனுபவத்தில் உள்ளது. அதுபோலவே, அஞ்ஞானத்தினால் பிரபஞ்சஞானம் பந்தம், ஞானத்தினால்

பந்தத்தின் நாசம். ஆகவே பந்தம், மோக்ஷம் என்ற இரண்டும் அஞ்ஞானத்தினால நிலவியவைவ் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

[இந்த விஷயத்தை அடுத்த செய்யுளினால் விளக்குகின்றார்:—

अज्ञानसंज्ञौ भवबन्धमोक्षौ द्वौ नाम नान्यौ स्त ऋतज्ञभावात् ।
अजस्रचित्यात्मनि केवले परे विचार्यमाणे तरणाविवाहनी ॥ २६

அக்ஞானஸம்க்ஞௌ பவபந்தமோக்ஷௌ
த்வௌ நாம நான்யௌ ஸ்த ரிதக்ஞபாவாத் ।
அஜஸ்ரசித்யாத்மநி கேவலே பரே
விசார்யமாணே தரணாவிவாஹநீ ॥ 26

கதிரவனுடைய தோற்றமுள்ள காலத்தை பகல் என்றும், மறைவுள்ள காலத்தை இரவு என்றும் அறிந்த நாம், பகல் இரவு என்ற இரு காலங்களையும் அந்தக் கதிரவனிடம் கற்பனை செய்து கூறுகிறோம். அவ்விருகாலமும் சூரியனிடம் உள்ளவையல்ல. சூரியன் கண்ணுக்குத் தென்படாத காலம் இரவு, தென்படுகிறகாலம் பகல் என்பதேயன்றி அவைகளுக்கு சூரியன் காரணமுமல்ல, அதிஷ்டானமுமல்ல. ஆயினும், காரணமாக சூரியனைக் கூறுதல் உலகவழக்கு. (அந்தப் பரம்பரை = சரியான ஆதாரமில்லாவிடினும் உலகப் பேச்சு.) அதுபோல், பவத்தின் = ஸம்ஸாரத்தின் பந்த மோக்ஷங்கள் இரண்டும் ஆத்மாவினுடைய குணங்களல்ல. அஞ்ஞானத்தினால் கற்பனை செய்யப்பட்டவை. ஆத்மாவின் தன்மை உண்மையான நிலை, ஞானவடிவமும் ஆனந்தரூபமும் என்பதேயாகும்.

பந்தம் உண்மையானாலன்றோ, மோக்ஷமும் உண்மையானதாகும். பந்தம் அஞ்ஞானத்தினால் கற்பிதம், மோக்ஷமும் அதுபோலவே கற்பிதம். (ஸச்சிதானந்தவடிவம் ஸத்தியம்).

[பரமாத்மஞானத்தினுல் ஸம்ஸாரபந்தம் நீங்குகின்றது என்று கூறுதல் சரி. அந்தப் பரமாத்மாவை தன்னுடைய ஆத்மா என்று ஏன் அறிந்துகொள்ளவேண்டும்? அந்த தத்துவஞானம்தான் பந்தத்தின் நாசத்திற்குக் காரணம் என்று ஏன் கூறவேண்டும்? என்று சந்தேகம் எழ, ஆத்மாவின் உண்மையான நிலைமையினுடைய அஞ்ஞானம் தான், ஜடமாகிய தேகத்தில் 'நான்' என்ற அபிமானத்தின் காரணம் என்று கூறி அத்தகைய தேகாத்மஞானத்தை விலக்காமல் பரமாத்மஞானத்திற்கு முயற்சி செய்தலை ஏளனம் செய்கிறார்:—

त्वामात्मानं परं मत्वा परमात्मानमेव च ।
आत्मा पुनर्बहिर्मृग्य अहोऽज्ञजनताज्ञता ॥ २७

த்வாமாத்மானம் பரம் மத்வா
பரமாத்மாநமேவ ச ।
ஆத்மா புனர்பஹிர்ம்ருக்ய
அஹோ஽க்ஞஜநதாக்ஞதா ॥ 27

ஆத்மாவாகிய உம்மை தேகம் முதலியதாக நினைத்து, (மாறுதலாக அறிந்து) அவ்வாறு தேகம் முதலியதை ஆத்மாவென தப்பிதமாக தெரிந்துகொண்டு—சேதனனை ஆத்மாவை ஜடப்பொருளாகிய தேகம் என்று மாறுதலாகவும், ஜடமான உடலை இதுதான் சேதனனை ஆத்மா என்று மாருகவும் திரிபுஞானத்தை அடைந்து, அதன் பயனைப் பிரித்து அறிந்துக்கொள்ளாமல் இந்த உடலிலேயே மறைந்திருக்கும் ஆத்மாவைக் காணவில்லையே என்று வருந்தி, அதனை அடைவதற்கு வெளியே தேட முயற்சிசெய்தல் என்பது, உள்ளேயே மறைந்திருக்கும் பொருளை காணவில்லை என்று பிரமித்து வெளியே தேடுதல்போல் வியக்கத்தக்கது. அஞ்ஞானிகளுடைய பேதமையின் வன்மை!

[ஆகையால்—

अन्तर्भवेऽनन्त भवन्तमेव ह्यतत्त्यजन्तो मृगयन्ति सन्तः ।
असन्तमप्यन्त्यहिमन्तरेण सन्तं गुणं तं किमु यन्ति सन्तः ॥ २८

அந்தர்பவே஽னந்த பவந்தமேவ
ஹ்யதத்யஜந்தோ ம்ருகயந்தி ஸந்த: ।
அஸந்தமப்யந்த்யஹிமந்தரேண
ஸந்தம் குணம் தம் கிமு யந்தி ஸந்த: ॥ 28

அனந்த = முடிவற்றவரே ! விவேகிகள் ஜடமாகிய இந்த உடலை அநாத்மா என்று உணர்ந்து இதற்குள் மறைந்திருக்கும் உம்மையே ஆத்மாவாக உணருவதற்கு முயற்சிக்கின்றனர். விவேகத்தினால் உடலை அநாத்மா என்று தீர்மானம் செய்து சேதனனாகிய ஜீவனை பரமாத்மாவைக்காட்டிலும் வேறுபட்டவனல்லன் என்ற நிச்சயத்தை அடைகின்றனர். உண்மையல்லாததாயினும் கயிற்றில் தோன்றிய பாம்பை 'இல்லை' என்று உணராமல் கயிறுதான் வாஸ்தவம் என்று அறிந்துகொள்கின்றனரா?

[அப்படியாகில், முக்திக்கு ஞானம்தான் முக்கியஸாதனம் என்பது திண்ணம். ஏன் பக்தியைப்பற்றி புகழ்கிறீர்? என்று வினா ஏற்படுகையில், விடை அளிக்கிறார்:—

अथापि ते देव पदाम्बुजद्वयप्रसादलेशानुगृहीत एव हि ।
जानाति तत्त्वं भगवन्महिम्नो न चान्य एकोऽपि चिरं विचिन्वन् ॥

அதாபி தே தேவ பதாம்புஜத்வய-
ப்ரஸாதலேசானுக்ருஹீத ஏவஹி ।
ஜானாதி தத்வம் பகவன் மஹிம்னோ
ந சான்ய ஏகோ஽பி சிரம் விசின்வன் ॥ 29

ஹே தேவரே! ஹே பகவானே! தத்வஞானம் முக்திக்கு ஸாதனமாயினும், அது கிடைப்பதரிது. உங்களுடைய பாதாரவிந்தங்களின் மிகச் சிறிதளவாவது அருள் கிடைத்தவன் தத்வஞானத்தை அடைகிறான். அவன்தான் உமது மாகாத்மியத்தையும் உண்மையாக அறிகிறான். உமது மகிமையை அறிந்தவனுக்குத்தான் ஞானம் உண்டாகுமேயன்றி மற்றவன் யாராயினும் எவ்வளவு காலம் முயற்சிசெய்தாலும் அதனைப் பெறமுடியாது.

[உமது பாதாரவிந்தங்களின் அருளுக்கு ஸாதனபக்தி மூலகாரணம். அதற்குச் சான்றோர்களின் ஸகவாசம் உபாயம். அவர்களுடைய ஸகவாஸத்தினால் பரமனுகிய உமது லீலாவிபூதிகளை கீர்த்தனஞ்செய்வதில் ஈடுபடுகிறான். அதனால் அருள் ஏற்பட்டு ஞானமும் ஸித்திக்கிறது. ஆகையால், பக்தியின்றி ஞானமில்லை, ஞானமின்றி முக்தியில்லை.]

तदस्तु मे नाथ स भूरिभागो भवेऽत्र वाऽन्यत्र तु वा तिरश्चाम् ।
येनाहमेकोऽपि भवज्जनानां भूत्वा निषेवे तव पादपल्लवम् ॥ ३०

ததஸ்து மே நாத ஸ பூரிபாகோ
பவேऽத்ர வாऽந்யத்ர து வா திரச்சாம் ।
யேனாஹமேகோऽபி பவஜ்ஜனானாம்
பூத்வா நிஷேவே தவ பாதபல்லவம் ॥ 30

ஆகையால், ஹே நாதா! எனக்கு அத்தகைய சிறந்த பாக்கியம் உண்டாகவேண்டும். யாதெனில், இந்தப் பிறப்பிலோ அல்லது விலங்கு முதலிய வேறு பிறப்பையடைந்தோ, எவ்விதத்திலாவது நான் உங்களைச்சேர்ந்தவர்களில் ஒருவனாக அமைந்து உமது தளிர்போன்ற மிருதுவான திருவடியைச் சேவிக்கவேண்டும். அவ்வாறு அருள்வீர்களாக.

[தேவர் முதலிய பிறப்பைக்காட்டிலும் மிகச் சிறந்தது, பகவானுடைய திருவடிகளில் பக்திகொண்ட நிலைமையே

யாகும் என்பதை ஆனந்தத்துடன் ஏழு செய்யுட்களால் விளக்குகிறார் :—

अहोऽतिधन्या व्रजगोरमण्यः स्तन्यामृतं पीतमतीव ते मुदा ।
यासां विभो वत्सतरात्मजात्मना यत्तृप्तयेऽद्यापि न चालमध्वराः ॥

அஹோऽதிதன்யா வ்ரஜகோரமண்ய:
ஸ்தன்யாம்ருதம் பீதமதீவ தே முதா ।
யாஸாம் விபோ வத்ஸதராத்மஜாத்மனு
யத்ருப்தயேऽத்யாபி ந சாலமத்வரா: ॥ 31

ஹே விபுவே = எங்கும் வியாபித்தவரே! யாகங்கள் கூட [பக்தியுடன் செய்யபபடுவதில்லை என்ற காரணத்தினுல்] தங்களை சந்தோஷமடையும்படிச் செய்வதில்லை. அவைகளைச் செய்கின்றவர்களுக்குத் தங்களுடைய அருள் கிடைப்பதரிது. அவ்வாறிருக்கையில், கன்றுகளாகவும், கோபர்களாகவும் உருவமெடுத்துக்கொண்டு, எந்தப் பசுக்களுடையவும், இடையப்பெண்மணிகளுடையவும் ஸ்தன்யத்தை = தாய்ப்பாலை அன்புடன் அருந்தினீர்களோ, அந்தகைய பசுக்களும், கோபிமார்களும் நிகரில்லா பாக்கியமுடையவர்கள். என்ன ஆச்சரியம்! அவர்களுடைய ஸ்தன்யம் அமிருதச்சுவையுள்ளது. அமரராகிய தாங்கள் அருந்தியமையால் அந்த ஸ்தன்யம் அமிருதம் என்பதில் என்ன சந்தேகம்!

[ஏராளமானப் பொருளைச் செலவுசெய்து பகவானுடைய அருளைப் பெறுவதற்கு அநேகர்கள் வேள்விகளைச் செய்கின்றனர். ஆயினும் அதனைப் பெறுவதில்லை. ஒருவிதமான வைதிக ஸத்கர்மத்திற்கும் உரிமையற்ற பசுக்களும், கோபியர்களும் எதிர்பாராதவிதத்திலேயே பகவான் அவர்களுடைய ஸ்தன்யத்தை மிக்க அன்புடன் அருந்தினுர்.

அவர்களுடைய பாக்கியத்தின் சிறப்பை வேதங்கள்கூட கூற வல்லமையற்றவை.]

अहो भाग्यमहो भाग्यं नन्दगोपव्रजौकसाम् ।
यन्मित्रं परमानन्दं पूर्णं ब्रह्म सनातनम् ॥ ३२

அஹோ பாக்யமஹோ பாக்யம் நந்தகோபவ்ரஜௌகஸாம் ।
யன்மித்ரம் பரமானந்தம் பூர்ணம் பிரம்ம ஸனாதனம் ॥ 32

பரமானந்தவடிவமும், பரிபூர்ணரும், அழிவற்ற பரம்பொருளுமாகிய ஸ்ரீகிருஷ்ணர் எவர்களுடைய ஆருயிர் நண்பராக விளங்குகின்றனரோ, நந்தகோபருடைய கோகுலத்தில் வசிக்கின்றவர்களாகிய அந்த கோபர்களுடைய பாக்கியம் மிகப் பெரிது. அளவிடமுடியாதது.

[நந்தகோபவ்ரஜௌகஸாம் = கோகுலத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் என்று கூறுவதினால், பசுக்களுடையவும், கோபிகோபர்களுடையவும் மாத்திரமல்ல; செடிகொடிகள் உட்பட உயிருள்ள எல்லாவற்றினுடையவும் பாக்கியம் என்று கருத்து. 'பாக்கியம் அஹோ' என்று இரண்டு தடவை கூறுதல், மனதில் மகிழ்ச்சியின் மிகுதியினால் பரவசத்துடன் நிலவியது. மற்றவர்களுக்கு (யோகிஜனங்களுக்கு) பரமானந்தப்பொருள் இவர்களுக்கு மித்திரன் = உற்றவர்கள் ஆற்றும் செயலுடன் கூடியவர் என்றும், நட்பைக் காட்டுகிறவர் என்றும், நட்புக்கு விஷயமாகவும் விளங்குகிறார் என்றும் கருத்து. உலகில், ஆனந்தத்தில் ஆசைகொள்ளுபவர்கள் ஜனங்கள். இங்கு ஆனந்தம் இந்த ஜனங்களிடம் அன்புவைத்தது. அதிலும், பரமான = சிறந்த ஆனந்தம் நட்பைக் காட்டுகிறபடியால் பாக்கியத்தின் எல்லை காண இயலாது. அந்த ஆனந்தம், ஸநாதனம் = (நிலையானது) விஷயங்களுடைய சம்பந்தமில்லாமையால் சாச்வதமானது.

மற்றவர்களுக்கு, விஷயங்களின் சம்பந்தத்தினால் நிலவும் ஆனந்தம் ஸ்திரமாக இருப்பதில்லை. இவர்களுக்கு, அந்த ஆனந்தமும் நிலையாயுள்ளது. ஏனெனில், இவர்களுடைய பொருள்கள் யாவும் ஸ்ரீகிருஷ்ணரே! அவர் அழிவற்றவராகையால் அவருடைய சம்பந்தத்தினால் உண்டாகிற ஆனந்தமும் அழிவற்றது. மேலும், பிரம்மதேவனாகிய (என்னுடைய) ஆனந்தத்தைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமான ஆனந்தம் என்று கூறி, எதனை மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதது என்று உபநிஷத்துக்கள் நிரூபணம் செய்கின்றனவோ, அந்த பிரம்மவஸ்து இவர்களுக்கு நண்பர். பிரம்மவஸ்துவாகிய பரமனை நண்பராக விரும்புகிறவர்கள் உலகத்திலுளார். ஆனால், பரமாத்மா மற்றவர்களை நண்பர்களாக அபிமானித்து விளங்குவது இவர்களிடம்தான் மேலும் நற்சுவையுள்ள அமிருதத்திற்குப் பரிமளவாஸனையும் அமைந்தாற்போல், இவர்களுடைய நண்பர் அநுகூலமான நற்குணங்கள், நல்ல சீலம், அழிவற்ற செல்வம், அழகு முதலியவைகள் நிரம்பியவர் என்பதை 'பூர்ணம்' என்ற சொல விளக்குகிறது. கண்களுக்கெதிர்நிற்கும் பொருளை 'இந்தப் பரமன்' என்று கூறுமல மறைந்த பொருள்போல் கூறுதல், மனதிலுள்ள குதூகலத்தின் பெருமிதத்தைக் காட்டுகின்ற சொற்சுவையாகும்.]

एषां तु भाग्यमहिमाऽच्युत तावदास्ता-
मेकादशैव हि वयं बत भूरिभागाः ।
एतद्धृषीकचषकैरसकृत् पिबामः
शर्वादयोऽङ्घ्र्युदजमध्वमृतासवं ते ॥ ३३

ஏஷாம் து பாக்யமஹிமாऽச்யுத தாவதாஸ்தா-
மேகாதசைவ ஹி வயம் பத பூரிபாகா: ।

ஏதத் த்ருஷீகசஷகைரஸக்ருத் பிபாம:
ஸர்வாதயோऽங்க்ர்யுதஜமத்வம்ருதாஸவம் தே ॥ 33

அச்சுதரே! இவர்களுடைய பாக்கியத்தின் சிறப்பு இருக்கட்டும். சிவன் முதலிய தேவர்கள் இந்த கோபர்களுடைய இந்திரியங்களுக்கு அதிஷ்டானதேவர்களாக இருந்துகொண்டு அவர்களுடைய பொறிகள்மூலமாக உமது திருவடிமலரிலிருந்து பெருகும் மகரந்தத்தை பானஞ்செய்கின்றனர். அவர்களில் நானும் ஒருவன். அதனுல் நாங்களே சிறந்த பாக்கியமுடையவர்கள். ஒவ்வொரு இந்திரியத்தின் மூலமாக ஒவ்வொரு சுகத்தை அனுபவிக்கின்ற தேவர்களாகிய நாங்கள் தனிப்பட்ட ஒவ்வொன்றினுலும் ஆனந்தமனுபவிக்கப்பெற்ற பாக்கியமே சிறந்ததென்றுல், எல்லாவித சுகங்களையும் அனுபவிக்கும் ஜீவர்களாகிய கோபர்களுடையவும், கோபிகளுடையவும், கோகுலத்திலுள்ள ஏனைய ஜீவர்களுடையவும் பாக்கியம் சொல்லுக்கு அடங்குமா?

இந்திரியங்களுக்கு அதிஷ்டானதேவர்கள்—1) அஹங்காரத்திற்கு உருத்திரன், 2) புத்திக்கு பிரம்மன், 3) மனதிற்கு சந்திரன், 4) செவிகளுக்கு திசைகள், 5) த்வக்கிற்கு வாயு, 6) கண்களுக்கு சூரியன், 7) நாவிற்கு வருணன், 8) மூக்கிற்கு அசுவினீதேவர்கள் (இருவர்கள் சேர்ந்து ஒன்று), 9) வாக்கிற்கு அக்கினி, 10) கைகளுக்கு இந்திரன், 11) பாதங்களுக்கு உபேந்திரன், 12) உபஸ்தத்திற்கு பிரம்மன், 13) பாயுவிற்கு (அபானத்திற்கு) மித்திரன்.

तद्भूरिभाग्यमिह जन्म किमप्यटव्यां
यद्गोकुलेऽपि कतमाङ्घ्रिरजोऽभिषेकम् ।
यज्जीवितं तु निखिलं भगवान् मुकुन्द-
स्त्वद्यापि यत्पदरजः श्रुतिमृग्यमेव ॥ ३४

தத்பூரிபாக்யமிஹ ஜன்ம கிமப்யடவ்யாம்
யத்கோகுலே஽பி கதமாங்க்ரிரஜோ஽பிஷேகம் ।
யஜ்ஜீவிதம் து நிகிலம் பகவான் முகுந்த-
ஸ்த்வத்யாபி யத்பதரஜ: ச்ருதிம்ருக்யமேவ ॥ 34

எந்த முகுந்தருடைய பாதங்களின் தூசியை மறைகள் தேடுகின்றனவோ, அவ்வாறு தேடியும் இன்னும் அவைகள் அந்த தூசியை அறியவும் அடையவுமில்லையோ, அந்த பகவான் எவர்களுக்கு ஆருயிராக இருக்கின்றனரோ, அந்த கைய கோபர்களில் யாராவது ஒருவனுடைய கால்தூசிகள் என்மீது படும்படி மண்ணுலகில், இந்த வனத்தில், அதிலும் கோகுலத்திற்கு அருகாமையில் யாதாவது ஒரு பிறவியில் பிறக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

[ஆரம்பத்தில் "உம்மை அடைவதற்காகத் துதிக்கிறேன்" என்று கூறினீர். இப்பொழுது இடையர்களுடைய பாததூசியை விரும்புகிறீர். ஒன்றுக்கொன்று முரண்படுகிறது என்று ஒரு ஆக்ஷேபம். அதற்கு விடை கூறுகையில், எல்லோருக்கும் முக்தியை அளிக்கின்ற பகவான் இந்த இடையர்களுடைய பக்திக்குக் கடன்பட்டிருக்கிறார். இது தான் ஒப்புயர்வற்ற பாக்கியம் என்று விளக்குகிறார் :—

एषां घोषनिवासिनामुत भवान् किं देव रातेति न-
श्चेतो विश्वफलात् फलं त्वदपरं कुत्राप्ययन् मुह्यति ।
सद्वेषादिव पूतनाऽपि सकुला त्वामेव देवापिता
यद्धामार्थसुहृत्प्रियात्मतनयप्राणाशयास्त्वत्कृते ॥ ३५

ஏஷாம் கோஷநிவாஸிநாமுத பவான்
கிம் தேவ ராதேதி ந:
சேதோ விச்வபலாத் பலம் த்வதபரம்
குத்ராப்யயன் முஹ்யதி ।

ஸத்வேஷாதிவ பூதனாऽபி ஸகுலா
த்வாமேவ தேவாபிதா
யத்தாமார்த்தஸுஹ்ருத்ப்ரியாத்மதனய-
ப்ராணாசயாஸ்த்வத்க்ருதே ॥ 35

ஹே தேவ = ஸ்வயம் பிரகாசரூபியே! கோகுலத்தில் வசிக்கும் இவர்களுக்கு தாங்கள் எதனையளித்து அவர்களுடைய பக்திக்கு ஈடுசெய்யப்போகிறீர்கள்? என்று யோசிக்கையில் ஒன்றுமில்லை என்று கருதி எங்கள் மனம் ஒன்றும் புலப்படாமல் மங்குகிறது. எல்லாவற்றிற்கும் பயனாகிய உமது ஆத்மாவைத்தான் தாங்கள் தானம் செய்யவேண்டும். அதனைக் கொடுத்தாலும் அவர்களுடைய கடனைத் தீர்க்கமுடியாது என்பது எமது நிச்சயம். ஏனெனில், ஹே தேவரே! பூதனையென்ற அரக்கி தங்களுடைய பகைவளாக உயிரையெடுக்க வந்தபோதிலும், தாதியின் வேஷத்தை அணிந்து ஸ்தன்யபானம் செய்வித்தாள். அவளுடைய உள்ளத்திலுள்ள தீய எண்ணத்தைப் பொருட்படுத்தாமல், வெளிவேஷத்திற்கும் செயலுக்கும் பயனாக அவளுக்கு குலத்தோராகளுடன் முக்தியளித்தீர்கள். கோபர்களோவெனில் இல்லம், பொருள், நண்பன், கணவன், மனைவி, உடல், மகன், உயிர், மனம் ஆகிய யாவற்றையும் உங்களுக்கே அர்ப்பணம் செய்தவர்கள். உமது ஒவ்வொரு பொருளும் தனிப்பட்ட முறையில் அந்தந்த பக்தனுக்கு ஈடுபடுகிறது. கோபர்களுடைய எல்லாப் பொருள்களும் உமக்கே அர்ப்பணம் செய்யப்பட்டவை. இந்த நிலையில் பகைவனுக்கும் பக்தனுக்கும் வித்தியாஸம் வேண்டுமல்லவா? ஆகையால், பக்தர்களான கோபர்களுடைய பக்தியாகிய அன்பிற்கு, ஸர்வசக்தராயினும் தாங்கள் பிரதிபலம செய்யமுடியாமையால் ஜன்மஸாபல்யம் அடைந்தவர்களன்றோ இவர்கள்! அவர்களுடைய பாததூளியை நான் வேண்டுவதில் என்ன வியப்பிருக்கிறது?

முருந்தனே! அவர்களுக்கு தாங்கள் அடிமையென்ற சொல் கூட அவருடைய பக்தியாகிய அன்பின் சிறப்பிற்கு அளவிடமுடியாதது. இந்நிலைமைதான் கிடைக்கவேண்டும். ஸ்ரீ நிவாஸனையே கடன்பட்டவராகச் செய்தவர்கள் அன்றோ அவர்கள்!

[விருப்புவெறுப்புக்களை அகற்றிய துறவிகளுக்கே என்னைக்காட்டிலும் வேறு பொருள்கள் இல்லை. அவைகளுக்கு = விருப்புவெறுப்புக்களுக்கு ஈடுபட்டுள்ள இவர்களுக்கு என்னை அடைதல் தக்க பயன் அல்லவா? என்ற ஆட்சேபம். அதற்கு விடை:—

तावद् रागादयः स्तेनास्तावत् कारागृहं गृहम् ।
तावन्मोहोऽङ्घ्रिनिगडो यावत् कृष्ण न ते जनाः ॥ ३६

தாவத் ராகாதய: ஸ்தேனா-
ஸ்தாவத் காராக்ருஹம் க்ருஹம் ।
தாவன்மோஹோऽங்க்ரிநிகடோ
யாவத் க்ருஷ்ண ந தே ஜனா: ॥ 36

ஹே! கிருஷ்ண! ஸச்சிதானந்தரூபியே! ஆத்மஸ்வரூபத்தை மறைத்து திருடர்கள்போல் துன்பம் விளைவிக்கின்ற விருப்புவெறுப்புக்கள் முதலியவைகளும், சிறைக்குச் சமமான இல்லமும், அக்ஞானமாகிய கால்விலங்கும் தங்களுடைய அபிமானம் (இவன் என்னைச் சேர்ந்தவன் என்ற) உண்டாகும்வரையில்தான் துக்கத்தையளிக்கும். மனிதர்கள்மீது உங்களுடைய பற்று (அன்பு) உண்டானபிறகு விருப்பு முதலியவற்றிற்கு தாங்களே பொருளாகிறீர்கள். துன்பங்களும் தொலைகின்றன. ஆகவே, துறவிகள்போல் கோபர்களும் உங்களிடமே பற்றுள்ளவர்கள் மட்டுமல்ல, த்ரி (மூன்று) கரணங்களாலும் எப்பொழுதும் தங்களையே

பஜித்துக்கொண்டிருக்கின்றனர் என்ற விசேஷமிருக்கின்றது. ஆகையால், அவர்கள் துறவிகளுக்கும் மேன்பட்டவர்கள் என்பது திண்ணம்.

['அதற்காகவே நான் இந்த கோபர்களுக்குப் புதல்வன் முதலிய உருவத்துடன் இருக்கிறேன்' என்று கூறுவீர்களேயாகில், அதுவும் தகுதியல்ல என்று கூறுகிறார்:—

प्रपञ्चं निष्प्रपञ्चोऽपि विडम्बयसि भूतले ।
प्रपन्नजनतानन्दसन्दोहं प्रथितुं प्रभो ॥ ३७

ப்ரபஞ்சம் நிஷ்ப்ரபஞ்சோऽபி விடம்பயஸி பூதலே ।
ப்ரபன்னஜனதானந்தஸந்தோஹம் ப்ரதிதும் ப்ரபோ ॥ 37

ஹே! பிரபுவே = காரியங்களைச் செய்வதற்கும், செய்யாமலிருப்பதற்கும், வேறுவிதம் செய்வதற்கும் வல்லமையுள்ளவரே! பிரபஞ்சத்தின் சம்பந்தமில்லாதவராயினும், தங்களை சரணமடைந்த அடியார்களுக்கு ஆனந்தத்தைப் புகட்டுவதற்காக, மண்ணுலகில் பலவிதமாக, பிரபஞ்சத்துடன் சம்பந்தத்தை தோற்றுவிக்கிறீர்கள். அதாவது, அவதாரமெடுத்து பல அரிய செயல்கள் ஆற்றுகிறீர்கள். உயிர், உடல், ஆவி முதலிய எல்லாவற்றையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்திருக்கையில், அந்த கோபர்களுக்கு கபடப் புதல்வனாக இருத்தல் தகுந்த பிரதிஉபகாரமாகாதன்றோ!

[இவ்வாறு பகவானுடைய மகத்துவம் அறிதற்கரிது என்பதை நன்கு விளக்கி, 'யாம் அந்தப் பரமனை நன்கு அறிவோம்' என்று கூறுகிறவர்களை ஏளனம் செய்கிறார்:—

जानन्त एव जानन्तु किं बहूक्त्या न मे प्रभो ।
मनसो वपुषो वाचो वैभवं तव गोचरः ॥ ३८

ஜானந்த ஏவ ஜானந்து கிம் பஹூக்த்யா ந மே ப்ரபோ ।
மனஸோ வபுஷோ வாசோ வைபவம் தவ கோசர: ॥ 38

ஹே பிரபுவே = எல்லா வன்மையுமுள்ளவரே! தங்களை 'அறிவோம்' என்று கூறுகிறவர்கள் அறிந்துகொள்ளட்டும். அந்த விஷயத்தில் நான் ஏறக்கூறுவதற்கு என்ன இருக்கிறது? (நான் அறிந்தது யாதெனில்) உமது வைபவம், என்னுடைய மனதிற்கும், உடலிற்கும், வாக்கிற்கும் எட்டாதது.

(உங்களுடைய நாபியிலிருந்து தோன்றியவன் யான். அநேக ஆயிரம் வருஷகாலம் தவம் செய்து மிக வருந்தி உங்களுடைய அருளினாலேயே உங்களுடைய விராட்ரூபத்தைக் கண்ணுற்று உலகசிருஷ்டி செய்யும்படி அனுக்கிரகம் பெற்றவன். 'அந்த உலகசிருஷ்டி உனக்கு பந்தத்திற்குக் காரணமாகாது,' என்றும் உமது அருள்பெற்றவன். என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கியே மண்ணுலகில் அவதரித்தீர்கள். ஆயினும், உமது மகத்துவத்தின் ஒரு லவலேசத்தையே யான் அறிய வல்லமையற்றவன். அறிந்தவர்கள் அறிந்துகொள்ளட்டும் என்று பணிவுடன் கூறுவதுமன்றி, பகவானை அறிந்துகொண்டோம் என்ற செருக்கு, பெருமைக்குக் குறையாகும் என்றும், அற்பர்களான நமக்கு வாகதிஷ்டனதேவதையின் கணவனை நான்முகக்கடவுள் உபதேசமளித்துள்ளார் என்ற கருத்தை உணரவேண்டும்.)

[உலகங்களைப் படைத்தவராயினும் தான் உலகங்களுக்கு ஈசுவரன் என்ற அபிமானத்தை விலக்கிக் கூறுகிறார்:—

अनुजानीहि मां कृष्ण सर्वं त्वं वेत्सि सर्वदृक् ।
त्वमेव जगतां नाथो जगदेतत्तवार्पितम् ॥ ३९

அனுஜானீஹி மாம் க்ருஷ்ண
ஸர்வம் த்வம் வேத்ஸி ஸர்வத்ருக் ।
த்வமேவ ஜகதாம் நாதோ
ஜகதேதத்தவார்பிதம் ॥ 39

ஹே கிருஷ்ணா=ஸச்சிதானந்தரூபியே! எல்லாமறிந்தவராகிய தாங்கள் உமது மகிமையையும் எனது நிலைமையையும் அறிகிறீர்கள். தாங்கள்தான் உலகங்களுக்கு நாயகர். என்னுடையது என்ற அபிமானத்தை நான் அதன்மீது வைத்திருந்தேன். அந்த அபிமானத்தை நீக்கி எனது உடல் உட்பட உலகம் யாவையையும் உமக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன்.

श्रीकृष्ण वृष्णिकुलपुष्करजोषदायिन्
क्ष्मानिर्जरद्विजपशूदधिवृद्धिकारिन् ।
उद्धर्मशार्वरहर क्षितिराक्षस-
ध्रुगाकल्पमार्कमर्हन् भगवन् नमस्ते ॥ ४०

ஸ்ரீக்ருஷ்ண வ்ருஷ்ணிகுலபுஷ்கரஜோஷதாயின்
க்ஷ்மாநிர்ஜரத்விஜபசூததிவ்ருத்திகாரின் ।
உத்தர்மசார்வரஹர க்ஷிதிராக்ஷஸ-
த்ருகாகல்பமார்கமர்ஹன் பகவன் நமஸ்தே ॥ 40

ஹே ஸ்ரீகிருஷ்ணரே! விருஷ்ணிகுலமாகிய தாமரை மலர்களுக்கு ஆனந்தத்தை அளிக்கும் சூரியனே! பூமி, தேவர்கள், பூதேவர்கள், பசுக்கள் ஆகிய கடலுக்கு ஆனந்தத்தை அளிக்கின்ற சந்திரனே! அதர்மமாகிய இருளை நாசம் செய்பவரே! (சந்திரசூரியர்களுக்கு நிகரானவரே) பூமியில் தோன்றியுள்ள அரக்கர்களை வேருடன் அறுக்கின்றவரே! பூஜிக்கத்தக்க பகவானே! சூரியன் இருக்கும் காலமளவும், கற்பம் முடியுமளவும் உமக்கு வந்தனம்.

[சந்திரசூரியர்களுக்குப் பிரகாசத்தை அளிப்பவர் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா என்று வேதங்கள் கோஷிக்கையில், அவரை அந்த சந்திரசூரியர்களுக்குச் சமமாகக் கூறுதல் இழிவு என்று கருதி அவ்வாறு தான் கூறியதற்கு மன்னிப்பு கேட்பவராக "ஆர்க்கம்" என்று கூறினர். சூரியன் உட்பட எல்லா ஜோதிஸ்ஸுக்களிலும் (உலகங்களிலும்) வியாபித்து விளங்கும் உமக்கு நமஸ்காரம் என்று கூறியவாறு. மேலும், பிருந்தாவனத்தில் லீலைகளைக் காண்பித்தமையால் அங்குள்ள "ஆர்க்கம் = எருக்கின்செடிமுதல், ஆகல்பம் = தேவலோகத்திலுள்ள கற்பகவிருக்ஷமுட்பட வியாபித்து விளங்குகிற உமக்கு வந்தனம் என்றும், இந்த வந்தனம் கற்பகாலம் முழுதும் உண்டு என்றும், 'ஆகல்பம்' என்ற சொல்லை மறுபடியும் கூறி வணங்கினர் என்று அறிக.]

OTHER WORKS OF THE AUTHOR

Sanskrit—Tamil.

Sri Sankara Vijayam—with Text in Sanskrit and Tamil Translation and Notes in 3 Parts.

Part I	...	... 2—4—0
Part II	...	... 2—8—0
Part III in the Press.		
Prabhodha Sudhakaram		... 1—8—0
Prahladastuti in the Press.		

Copies can be had of :—

R. S. VADHYAR & SONS,
BOOK-SELLERS & PUBLISHERS,
KALPATHI-PALGHAT

VALMIKI ASHRAM,
Rajendra Prasad Road,
West Mambalam, MADRAS